Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

புதுப்பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
- பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத்தேவையில்லை
- வங்கிக் கணக்கு அவசியமில்லை
- நீடிக்கப்பட்ட சேவை நேரம்
- 365 நாள் சேவை
- 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM.NET
T.P: 021-222 7310, 021-222 7555, 021-222 7560
Fax: 021-222 7310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 28 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 24 (13.07.2004) செவ்வாய்க்கிழமை இதழ் :284

### மீண்டும் சமாதான முயற்சிகள் தொடர

# நோர்வேத் தூதுவர் பிரட்ஸ்கர் இன்று கிளிநொச்சிக்கு விஜயம்!

(கொழும்பு)

**சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து விடுதலைப் புலிகளுடன் முக்கிய பேச்சுக் களை நடத்துவது சம்பந்தமாக இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் இன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவுள்ளார்.**

**இன்று கிளிநொச்சிக்கு வரும் ஹான்ஸ் பிரட்ஸ்கர், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வ னைச் சந்தித்து பேச்சுக்களை நடத்துவார்.**

இதேவேளை - கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலை அடுத்து, விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்ந்தகளை ஆரம்பிப்பதற்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரித்து உடன் வழங்குமாறு நோர்வே ஏற்பாட்டாளர்களை அரசாங்கம் கேட்டுள்ளது.

இந்தவேண்டுகோளை அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜெயந்த தனபால நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரிடம் விடுத்தார்.

இதேவேளை - தற்போதைய சமாதான முயற்சியிலுள்ள தேக்க நிலையைப் போக்கு வதற்கு விரைவில் நோர்வேத் தரப்பினர் ஜனாதிபதி' சந்திரிகாவைச் சந்திக்கவுள்ள தாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

மாகாண சபைகளுக்கான தேர்தல் முடி வடைந்த நிலையில் மக்கள் சமாதானம் தொடர்பான ஜனாதிபதியின் கொள்கைக்குப் பூரண அங்கீகாரம் வழங்கியுள்ளனர். எனவே, அடுத்த கட்டமாக சமாதானப் பேச்சுவார்த் தையை ஆரம்பிக்க வேண்டியது அவசியம்.

இதன் அடிப்படையிலேயே நோர்வேயின் உயர் மட்டத்தினர் ஜனாதிபதியை அடுத்த ஒரு சில வாரங்களில் சந்திக்கவுள்ளதாக ஹரீம் பீரிஸ் தெரிவித்தபோதும், அது எப் போது என்பதனைத் தெளிவாகக் கூற வில்லை. (01)

## புலிகளுக்கு எதிராக கொழும்பில் சுவரொட்டி!

### ஜே.வி.பி மாபெரும் பிரசாரம்




(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும், அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட் இடைக்கால நிர்வாக சபைக்கு எதிராகவும் கொழும்பு நகரெங்கும் ஜே.வி.பியினர் சுவரொட்டிகளை ஒட்டியுள்ள னர்.

நேற்றுமுன்தினம் இரவு ஒட்டப்பட்ட இந் தச் சுவுரொட்டிகளில் காணப்பட்ட வாசகங் களில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சமாதான முகமூடி அணிந்து கொண்டு தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடத்தும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுப்படைத் தளபதியாக அடுத்து யாரை நியமிப்பது

### முடிவெடுப்பதற்கு குழு நியமனம்

(கொழும்பு)

கூட்டு நடவடிக்கைக் கட்டளைத் தளபதி யாக யாரை நியமிப்பது என்பது தொடர்பாக ஆராய்ந்து - முடிவுகளை எடுப்பதற்காக பாது காப்பு அமைச்சால் குழுவொன்று நியமிக்கப் பட்டுள்ளது.

முன்னர் இராணுவத் தளபதியாக இருந்த லெப்.ஜெனரல் லயனல் பலகல்லவே கூட்டு நடவடிக்கைத் தளபதியாகவும் பதவி வகித்து வந்தார். இவர் கடந்த மாதம் 30 ஆம் திகதி யுடன் ஓய்வுபெற்றதை அடுத்து, இந்தப் பத விக்கு எவரும் நியமிக்கப்படவில்லை.

அடுத்த கூட்டு நடவடிக்கைத் தளபதி யாக, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி நியமிக்கப்படவிருந்தபோதும் - ஜனாதிபதி சந்திரிகா கடைசி நேரத்தில் இந்த முடிவைக் கைவிட்டிருந்தார்.

பெரியளவிலான ஆளணி வளத்தைக் கொண்டிருக்கும் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரே கூட்டுப்படைக் கட்டளைத் தளபதி யாகப் பதவிவகிக்க வேண்டும் என இராணு வத் தரப்பிலிருந்து எழுந்த நிர்ப்பந்தத்தை அடுத்தே - வைஸ் அட்மிரல் தயா சந்த கிரியை இந்தப் பதவிக்கு நியமிக்கும் திட் டத்தை ஜனாதிபதி சந்திரிகா கைவிட்டி ருந்தார்.

இதையடுத்து இந்த வெற்றிடத்தை நிரப்பு வதற்கான நடவடிக்கையை மேற்கொள் வதற்கான குழுவொன்றைப் பாதுகாப்பு அமைச்சு நியமித்திருக்கிறது.

## பலத்த பாதுகாப்பின் மத்தியில் குடாநாட்டுக்கு வந்த ரட்ணசிறி

(யாழ்ப்பாணம்)

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையிலான உயர்மட் டப் பாதுகாப்பு அதிகாரிகள் குழுவொன்று நேற்று யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்து இங்குள்ள பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆராய்ந்தது.

இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட, கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா ஆகியோருடன் பலாலி விமானப்படைத் தளத்தை வந்தடைந்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்ரமநாயக்கவை யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால வரவேற்றார்.

பலாலி இராணுவத் தலைமையகத்தில் நடந்த உயர்மட்டப் பாதுகாப்பு மாநாட்டில் குடாநாட்டின் பாதுகாப்பு நிலவரம் குறித்து பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக் கிரம நாயக்க ஆராய்ந்தார்.

இந்தச் சந்திப்பில் குடாநாட்டுக் கட்ட ளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திர பால இங்குள்ள நிலைமைகள் குறித்து ரட்ண சிறி விக்ரமநாயக்கவுக்கு விளக்கமளித்தார்.

இந்தச் சந்திப்பில் குடாநாட்டுப்பிரதிக் கட்டளைத் தளபதி, குடாநாட்டில் நிலை கொண்டுள்ள டிவிஷன்களின் கட்டளை அதி காரிகள், கடற்படையினரின் வடபிராந்தியத் தளபதி, விமானப்படை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதையடுத்து ஹெலிகொப்ரர் மூலம் மிரு சுவிலிலுள்ள 55 ஆவது டிவிசன் தலைமை யகத்துக்குச் சென்ற ரட்ணசிறி விக்கிரம நாயக்க தலைமையிலான குழுவினர்,

அங்கிருந்து தரை மார்க்கமாக முக மாலை முன்னரங்கக் காவலரண் பகுதிக்குச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழுவைச் சேர்ந்த இருவர் மட்டக்களப்பில் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசவிரோத நட வடிக்கையில் ஈடுபட்ட இருவரைத் தாம் கடந்த சனிக்கிழமை கைதுசெய்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு - அரசடித் தீவைச் சேர்ந்த அரசரத்தினம் - திருத்தணி (வயது 25) மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பைச் சேர்ந்த பஞ்சாட்சரம் - கிருஷ்ணகுமார் ( வயது 24) ஆகிய இருவருமே கைதுசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களிடமிருந்து ஏ.கே. 47 ரகதுப்பாக்கி ஒன்றும், கைக்குண்டு ஒன்றும் மற்றும் கணிச மானளவு ரவைகள் என்பனவும் மீட்கப்பட்டு ள்ளதாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித் தனர். இதேவேளை கைக்குண்டு வைத் திருந்த ஆலய பூசாரி ஒருவர் மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டார்.

மட்டக்களப்பு - போரதீவு கற்பகப் பிள் ளையார் ஆலயத்தின் பூசாரியான கடுக்கா முனையைச் சேர்ந்த முத்துலிங்கம் - ரவீந் திரன் (வயது 28) என்பவரே நேற்றுக் கைது

(12 ஆம் பக்கம் பார்க்க)

### இடைக்காலத் தன்னாட்சி யோசனையின் அடிப்படையில்

# புலிகளுடன் பேச்சு நடத்துவதென்ற அரசின் திட்டத்திற்கு அங்கீகாரம்

### தேர்தல் முடிவுகள் குறித்து ஜனாதிபதி

(கொழும்பு)

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை ஒன்றை அமைக்க விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங் கம் கடைப்பிடித்துவரும் கொள்கைகளுக்கு மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பதாக, ஜனாதி பதி சந்திரிகா கருதுவதாக ஜனாதிபதி செய லகம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட் டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது-

ஐக்கிய ஜனநாயக இலங்கைக்குள் உள் ளூர் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணவேண்டுமென்பதற்கும் மாகாணசபைத் தேர்தல்கள் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதற்கும் விடுதலைப் புலிகளுடனான சமாதானப்பேச்சுவார்த்தை களை ஆரம்பிப்பதற்கும், அரசாங்கம் கொண் டுள்ள சமாதானக் கொள்கைகளை தேர்தல் முடிவுகள் உறுதிப்படுத்தியுள்ளது.

இதேவேளை, கொழும்பிலும் கிழக்கிலும் இந்தவாரம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங் கள் குறித்து ஜனாதிபதி மிகவும் கவலை கொண்டுள்ளார்.

இத்தகைய சம்பவங்கள் அரசாங்கத்துக் கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையை குழப்பக்கூடிய அச்சுறுத்

(12 ஆம் பக்கம் பார்க்க)



எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR Your friend in the skies...

# ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்க புதிய சுற்றுநிருபம் அனுப்பிவைப்பு

(ஆழியவளை)

இலங்கை அதிபர்சேவை மற்றும் ஆசிரியர் சேவைகளைச் சேர்ந்தவர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் காணப்படும் முரண்பாடுகள் நீக்கப்படவுள்ளன.

இது தொடர்பான புதிய சுற்றறிக்கை ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் கே.ஏ.திலகரத்னவினால் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய சுற்று நிருபத்தின் பிரகாரம் 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற சகல அதிபர், ஆசிரியர்கள் அனைவரும் நன்மையடையவுள்ளனர்.

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் சம்பள அளவுத்திட்டங்கள் 6.10.1994 இல் இறுதியாகத் திருத்தப்பட்டன. எனினும், குறித்த திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற அதிபர்கள் 31.12.1996 இல் நடைமுறையில் இருந்த அதிபர் சேவை சம்பள அளவுத்திட்டத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

06.10.1994க்கு முன்னர் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் அதிபர் சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டிருப்பதாகக் கருதப்படும். அதன்படி அவர்கள் பெறும் சம்பளப் படிநிலையை 31.12.1996 ஆம் திகதியாகக் கருதி ஓய்வூதியங்கள் திருத்தப்படவுள்ளன.

இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி வெளியிடப்பட்ட ஓய்வூதியத் திருத்தங்களுடன் தொடர்புடையதாக புதிய திருத்தங்கள் வெளியிடப்படவுள்ளதாக ஓய்வூதியப் பணிப்பாளர் தெரிவித்தார். (122)

# நான்கு கணினிசார்பு நூல்களை மத்திய கல்லூரி வெளியிடவுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 'மத்தியத்தின் வெளியீடுகள்' வரிசையில் நான்கு கணினிசார் நூல்களையும், அதன் தொகுப்பாகிய இறுவெட்டு ஒன்றையும் வெளியிடவுள்ளது.

நாளை காலை 10 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் இந்தநிகழ்வு நடைபெறவுள்ளது.

கணினி போதனாசிரியர் க. கமலசேகரத்தின் ஆக்கத்தில் உருவான க.பொ.த.உயர்தர மாணவர்களின் பொதுத்தகவல் தொழில்நுட்பப் பாடத்திட்டத்துக்கு ஏற்றதான கணினியின் வரலாறு மற்றும் கணினி பயில்பவர்களுக்கான, சிறப்பாகக் கணினி தட்டச்சுநெறி பயில்பவர்களுக்கு மிக அத்தியாவசியமான வழிகாட்டியும், பயிற்சி நூலுமான கணினி விசைப்பலகை, கணினி தட்டச்சு - தமிழ், கணினி தட்டச்சு - ஆங்கிலம் என்ற நான்கு நூல்களும் - இவற்றை உள்ளடக்கிய இறுவெட்டும் வெளியிடப்படவுள்ளது.

# மாணவனைக் காணவில்லை பெற்றோர் முறைப்பாடு!

(யாழ்ப்பாணம்)

தனியார் கல்வி நிறுவனத்திற்குச் சென்ற மாணவனைக் காணவில்லையென பெற்றோர் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

நயினாதீவைச் சேர்ந்த இராசகோபால் கஜேந்தன் (வயது 18) என்பவரையே காணவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 5 ஆம் திகதி மாலை தனியார் கல்வி நிறுவனத்திற்குச் செல்வதாகக் கூறி வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்ற மாணவனே இதுவரை வீடு திரும்பவில்லை எனப் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக, யாழ்.பொலிஸ், தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறை ஆகியோரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (ப)

# மே மாத நிவாரணம் அடுத்த வாரம் முதல்!

## வழங்குவதற்கு செயலகம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் நிவாரணம் பெறுவோருக்கு அடுத்த வாரம் முதல் மே மாத நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

யாழ்.மாவட்டத்தில் 1 இலட்சத்து 36 ஆயிரம் குடும்பங்கள் தற்பொழுது நிவாரணம் பெற்று வருகின்றன. இவற்றிற்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணம் நிறுத்தப்படுவது தொடர்பாக ஏற்பட்டிருந்த சர்ச்சையால் இரண்டு மாதங்கள் நிவாரண விநியோகம் தடை செய்யப்பட்டிருந்தன. எனினும், மீண்டும் நிவாரண விநியோகத்திற்கான அனுமதி கிடைக்கப்பெற்றதை அடுத்து மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த இருமாத நிவாரணமும் துரிதமாக வழங்கப்பட்டுள்ளமையால், அடுத்த கட்டமாக மே மாத நிவாரண விநியோகம் இடம்பெறவுள்ளது.

இதற்கு வேண்டிய சீனி, பருப்பு முதலிய பொருட்கள் தற்போது கையிருப்பில் இருப்பதால், அடுத்த வாரம் முதல் இந்த நிவாரண விநியோகம் ஆரம்பமாகும். தற்போது எமக்கு இருக்கும் பிரச்சினை பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதற்கு வேண்டிய அளவில் இடவசதி இல்லாமல் உள்ளமையாகும் எனவும் அந்த வட்டாரங்களில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## தேசிய தொழில் பயிற்சி நிறுவன

# ஆசிரிய டிப்ளோமா கற்கைநெறி யாழ்.தொழில்நுட்ப கல்லூரியில்!

(யாழ்ப்பாணம்)

தேசிய தொழிற்பயிற்சி நிறுவனத்தின் ஆசிரியர்களுக்கான டிப்ளோமா தரக் கற்கைநெறியை ஆரம்பிக்க இருப்பதாக யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் என்.யோகராஜன் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கில் உள்ள பாடசாலைகளில் தொழில்நுட்பப் பாடத்தை கற்பிப்போரும், தொழில்நுட்பக் கல்லூரிகளில் கற்பிப்போரும் இந்தக் கற்கை நெறியினைத் தொடர முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

தென்பகுதியில் சிங்களத்திலும், ஆங்கிலத்திலுமே இந்தக் கற்கை நெறி தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடத்தப்படுகின்றன.

எனினும், யாழ்.தொழில் நுட்பக் கல்லூரியில் இந்தக்கற்கை நெறி தமிழில் கற்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# கிராம அலுவலர்களுக்கு விசேட பயிற்சிக்கு ஏற்பாடு

'நீர்ப்' திட்டத்தின் கீழ் எதிர்வரும் 17 ஆம், 18 ஆம் திகதிகளில் கிராம அலுவலர்களுக்கான விசேட பயிற்சி ஒன்று நடைபெறவுள்ளது.

கடந்த வாரம் யாழ்.செயலகத்தில் நடைபெற்ற கிராமசேவையாளர்களுக்கான விசேட பயிற்சித் திட்டத்தில் கலந்து கொள்ளாதவர்களுக்கே இந்தப் பயிற்சிப்பட்டறை இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பயிற்சித் திட்டத்தின் கீழ் கிராம அலுவலர்களது கடமைகளைத் துரிதமாகவும் சிறப்பாகவும் மேற்கொள்வது தொடர்பாக விளக்கமளிக்கப்படுவதுடன், சிறுகுற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தல், காணிப்பதிவு, விவாகப்பதிவு, மரணப்பதிவு முதலியன தொடர்பாகவும் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவது தொடர்பாகவும் விளக்கமளிக்கப்படவுள்ளது. (ப)

## ஆங்கில தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.வைத்தீஸ்வரா கல்லூரியின் ஆங்கில தின நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

இன்று காலை 11.30 மணியளவில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.தியாகராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

# ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு கற்பித்தல் முறை பயிற்சிப் பட்டறை!

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டு பாடசாலை மாணவர்களின் ஆங்கிலக் கல்வித் தரத்தினை உயர்த்துமுகமாக ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கற்பித்தல் முறைப்பயிற்சிப் பட்டறை ஒன்று நடாத்தப்படவுள்ளது.

யு.எஸ்.எயிட் நிதி உதவியுடன் யுனிசெவ் நிறுவனத்தினால் நடாத்தப்பட இருக்கும் இத்திட்டத்தின் கீழ் ஆங்கில ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக போதனாசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

இவர்களை தேர்ந்தெடுப்பதற்கான எழுத்து மற்றும் நேர்முகப் பரீட்சைகள் நேற்று யாழ். வலயக் கல்விப்பணிமனையில் இடம் பெற்றன.

தேர்ந்தெடுக்கப்படும் போதனாசிரியர்களுக்கு முதற்கட்ட நடவடிக்கையாக பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

பின்னர், இவர்கள் மூலமாக ஏனைய ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## அலங்காரத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் மேற்கு மன்னதோட்டம் அருள்மிகு ஜெகஜோதி அம்பாள் ஆலய அலங்காரத் திருவிழா இன்று மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து ஒன்பது தினங்கள் நடைபெறவுள்ளது.

# விக்கினேஸ்வரா கல்லூரியின் பரிசளிப்பு, நிறுவன தினவிழா

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும், நிறுவன தின நிகழ்வும் எதிர்வரும் 17ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கல்லூரியின் சிவபாதசுந்தரம் அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளர் ஆர். தியாகலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளர் க.கந்தசாமி, தமிழீழ கல்விக்கழகத் துணைப் பொறுப்பாளர் க.அருள்மாஸ்ரரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தநிகழ்வில் - இவ்வருடத்தின் பரீட்சைகளில் உயர்புள்ளிகளைப் பெற்றவர்களுக்கும், மாவட்ட மாகாண மட்டங்களில் வேறு போட்டிகளில் பங்குபற்றி கல்லூரிக்குப் பெருமை தேடித்தந்தவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும், மாணவர்களின் கலை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (12)

# தமிழ்மொழி மூல ஆசிரியர் ஆட்சேர்ப்புக்கான பரீட்சை

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள அரசாங்கத் தமிழ்மொழி மூல பாடசாலைகளுக்கு இலங்கை ஆசிரியர் சேவையில் 3-II வகுப்பைச் சேர்ந்த தமிழ்மொழி மூலமான ஆசிரியர்களுக்கான ஆட்சேர்ப்புச் செய்யும் போட்டிப் பரீட்சை-2003 எதிர்வரும் 24ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்தப்பரீட்சைக்காக விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தற்போது அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இந்தப் பரீட்சையில் பொதுஅறிவு நுண்ணறிவு என இரு வினாப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் 'தெரியவருகிறது.

இதேவேளை - இப்பரீட்சைக்கு ஆட்சேர்க்கும் விண்ணப்பங்கள் கடந்த வருடம் மார்கழி மாதம் முதல் இந்த வருடம் ஜனவரி மாதம் வரைக்கும் ஏற்றுக் கொள்ளப்பட்டமை இங்கே குறிப்பிடத்தக்கதாகும். (113)












# மருதங்கேணி சுகாதார வசதிக்கு டென்மார்க் செஞ்சிலுவை உதவி!

மருதங்கேணிப் பிரதேசத்தின் சுகாதார வசதிகளை சீர்செய்வதற்கு டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கம் முன்வந்துள்ளது.

இந்தவிடயம் சம்பந்தமான கலந்துரையாடல் நேற்று முன்தினம் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்றது. இந்தக்கலந்துரையாடலில் - டென்மார்க் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள், யாழ். செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் மருதங்கேணிப்பிரிவு செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தப்பிரதேசத்தில் கட்டைக்காடு, மாமுனை, உடுத்துறை ஆகிய இடங்களில் சுகாதார நிலையங்களை அமைத்து, தொண்டர்களுக்கு பயிற்சிகள் வழங்குவதுடன் நடமாடும் வைத்திய சேவைகளையும் நடத்துவதற்கு உத்தேசித்துள்ளது. டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கத்தினர் யாழ். மாவட்டத்தில் வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு முன்னுரிமை கொடுத்து சேவை செய்யவுள்ளனர்.

மேலும் இவர்கள் வேலணை, ஊர்காவற்துறை, காரைநகர் போன்ற இடங்களுக்கும் சென்று அந்தப் பிரதேச மக்களுடன் கலந்துரையாடவுள்ளனர். (122)

# சாவகச்சேரி மக்கள் வங்கி விரைவில் கணினி மயம்!

முற்றிலும் கணினி மயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளை சாவகச்சேரி மக்கள்வங்கி வெகு விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் யாவும் பூர்த்தியடைந்த நிலையில் காணப்படுகிறது. அத்துடன் ஏ.ரி.எம். காட் வசதியும் இங்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஏ.ரி.எம். காட் வசதியைப் பெற விரும்புவர்கள் மக்கள் வங்கியில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூர்த்திசெய்யும்படியும், இதன் மூலம் தமது கொடுப்பனவுகளை இலகுபடுத்த முடியும் எனவும் மக்கள் வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் சிவபாதம் தெரிவித்தார். (29)

## சிறு விளம்பரம்

கதிர்காமம் முருகன் கோயில் திரு உலாக் காலத்தில் நிரந்தர சமாதானம் வேண்டிப் பிரார்த்திப்போம்.

உலக மக்களின் மனிதநேயம நீடித்த சமாதானமாகும். இக்காலத்தில் தாவரஉணவும், தேசிய உடையும், சமய கலாசாரமும் முதன்மை பெற வழிகாட்டுக. வே.கெ.தனபாலன், தலைவர், இந்து இளைஞர் பேரவை (782)

பொதுசன நூலகம்

# ஐ.தே.க ஆட்சிக்காலத்தில் புலனாய்வுப் பிரிவு சீர்குலைக்கப்பட்டது

## தேசப்பற்று இயக்கம் குற்றச்சாட்டு

ஐக்கிய தேசியக் கட்சி அரசின் ஆட்சிக்காலத்தில் சமாதான முயற்சிகளை மேற்கொண்டிருந்த வேளைகளில் இராணுவத்தினரின் புலனாய்வுப்பிரிவு, குட்டிச்சுவராக்கப்பட்டது என தேசப்பற்று தேசிய இயக்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசின் அரசியல் நடவடிக்கையில் அச்சம் ஏற்பட்டுள்ளது. இந்த அச்சத்தை நீக்கவேண்டும். அத்துடன் தேசியப் பாதுகாப்பையும் வலுவடையச் செய்யவேண்டும்.

இதற்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவைப் பலமுள்ள பிரிவாக அமைப்பதற்கு அரசு உடன் நடவடிக்கை எடுப்பதுடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுத்தாக்குதலுக்கு அஞ்சாது, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் விடுதலைப் புலிகளால் குட்டிச்சுவராக்கப்பட்ட இராணுவப் புலனாய்வுப் பிரிவை பலமாக்குவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு இந்த அமைப்பின் தேசிய நிறைவேற்றுக்குழுவின் தலைவரான எல்லே குணவன்ச, குணதாச அமர சேகர, மருத்துவர் வசந்த பண்டார, பி.எல்.பராக்கிரம, கலாநிதி சந்தன அபயரத்தின ஆகியோர் ஒப்பமிட்டு, செய்தி ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த பத்திரிகைக் குறிப்பிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு அச்சமின்றி அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது. (தே)

# சமாதான காலத்திலும் படையினர் பலமுள்ளவர்களாக இருக்கவேண்டும்

## மகாநாயக்கர்கள் கோரிக்கை

இலங்கையில் போரோ அல்லது சமாதானமோ நிலவினாலும், படையினர் எப்பொழுதும் பலமுள்ளவர்களாகவே இருக்கவேண்டும். அப்போதுதான் இந்த நாட்டைப் பாதுகாக்கமுடியும்.

இவ்வாறு கடந்த புதன்கிழமை தம்மைச் சந்தித்த புதிய இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொடவிடம், அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்களின் மகாநாயக்கர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பின்போது, அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வண.உடுகம சிறி புத்தரகித்த தேரர் தெரிவித்ததாவது -

நாட்டின் பாதுகாப்புக்குப் படையினர் பலமானதாக இருப்பது மிகவும் முக்கியமான விடயமாகும். அத்துடன் அவர்களது பலம் எமது கௌரவத்தின் பாற்பட்டதாகும். இராணுவத்தை யுத்தத்திற்கு மட்டும் பயன்படுத்துவதில்லை. அவர்கள் இந்த நாட்டை பாதுகாக்க எந்த நேரமும் உஷார் நிலையில் வைத்திருக்கப்படவேண்டியவர்கள் எனத் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய இராணுவத்தளபதி - இராணுவத்தினர் எப்பொழுதும் பலம் வாய்ந்தவர்களாகவும், உஷார்நிலையிலும் வைக்கப்பட்டுள்ளனர். இதனாலேயே உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் அவர்களுக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. ஏதாவது தேவைகள் ஏற்படுமிடத்து அதனைச் சந்திக்கக் கூடிய வகையில் இராணுவத்தினர் வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

இது மல்வத்த மகாநாயக்கர் வண. திப் பத்துவாவே சிறி சித்தாரத சுமங்கள மகாநாயக்க தேரர் தெரிவிக்கையில் -

இங்கு சிங்கள தேசம் மற்றும் பௌத்த மதம் என்பன பாதுகாக்கப்படுவது படையினர் மற்றும் பொலிஸாராலாகும்.

தாய்நாட்டுக்காக படையினரின் பங்களிப்பு இல்லையெனில், இந்தத் தேசம் மற்றும் மதம் என்பன பாதுகாக்கப்படமாட்டாது. எனவே, எமது ஆசீர்வாதம் படையினருக்கு எப்பொழுதும் உண்டு. படையினரும் பொலிஸாரும் இணைந்து எமது நாட்டைப் பாதுகாப்பதற்கு தொடர்ந்தும் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன் எனத் தெரிவித்தார்.

# பொதுத் தேர்தலில் அளித்த ஆணையை மக்கள் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளனர்!

## ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்



(கொழும்பு)

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் மூலமாக, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குக் கிடைத்த மக்கள் ஆணையை மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் மீண்டும் உறுதிப் படுத்தியிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தல் வெற்றி குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது -

பொதுத் தேர்தலைத் தொடர்ந்து நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல்களில் ஏழு மாகாணங்களது ஆட்சிப் பொறுப்பு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடம் சேர்ந்திருக்கிறது.

தேர்தல் முறைமையின் மூலமாக, நாடாளுமன்ற அதிகாரம் என்ற வகையாக அமைகின்ற போதிலும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு அதிகாரம் இருப்பது இந்தமுறை மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் மூலமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

மக்களிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ள ஆணை தொடர்பான யதார்த்த நிலையை நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியற் கட்சிகளும் புரிந்து கொள்ளவேண்டும்.

எந்த வேலைத்திட்டங்களுக்கு அல்லது அரசாங்கக் கொள்கைகளுக்கு மக்களின் ஆணை கிடைத்துள்ளது என்பது இந்தத் தேர்தலின் மூலமாகத் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

எனவே சகலவிதமான வாதப் பிரதிவாதங்களையும் கைவிட்டு, நாட்டைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியது இன்று அவசியம் என்றும் ஜனாதிபதி தனது அறிக்கையில் தெரிவித்தார்.

# தலைமைத்துவப் பதவிகளில் இளைஞர்களை நியமிக்கத் திட்டம்!

## ஐ.தே.க.தலைவர் ரணில் தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைதத்துவப் பதவிகளை இளைஞர்களிடம் வழங்குவதற்கு ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளதாக, கட்சியின் உள்வட்டாரங்கள் தெரிவித்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய தலைமைப் பதவிகளில் உள்ளவர்களினாலேயே நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தலில் தோல்வியடைய நேர்ட்டதாக நம்பும் ரணில், கட்சியின் தலைமைப் பதவிகளில் இளைஞர்களை நியமிக்க முடிவு செய்துள்ளார்.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் வீழச்சிக்குத் தற்போது தலைமைப் பதவியிலிருந்தும் பிரதித தலைவர் கரு ஜெயசூரிய, மிலிந்த மொறகொட, காமினி ஜெயவிக்கிரம பெரேரா, மஹிந்த யாப்ப அபேவர்த்தன மற்றும் வஜிர அபயவர்த்தன ஆகியோரே காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இவர்களுக்குப் பதிலாக ஐக்கிய தேசியக் கட்சியின் குருணாகல் மாவட்ட உறுப்பினர் அகில விராஜ் காரியவசம், சாகல ரத்னாயக்க, புத்தக்க, பத்திரான மற்றும் கஜந்த கருணாதிலக ஆகியோர் தலைமைப் பதவிகளில் நியமிக்கப்படவுள்ளதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

# மாகாணசபையை ஒழிக்கும் பிரேரணை நாடாளுமன்றில்!

## ஹெல உறுமய சமர்ப்பிக்குமாம்

(கொழும்பு)

மாகாணசபை முறையை ஒழிக்கும் யோசனையொன்றை ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது.

மாகாணசபையின் மூலம் நாட்டுக்கு எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை என்பதைச் சுட்டிக் காட்டும் முகமாகவே, இந்த முறை மாகாணசபைத் தேர்தலில் தமது கட்சி போட்டியிடவில்லையென கட்சியின் தலைவர் உடுவே தம்மாலோக தேரர் தெரிவித்தார்.

நடந்து முடிந்த மாகாணசபைத் தேர்தலில் பல படிப்பினையைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக விருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிங்களப் பௌத்த விரோதக் கொள்கை தேர்தலில் தோற்றுப் போயுள்ளது. மறுபுறத்தில் ஜனாதிபதியின் அரசியல் நிலைப்பாட்டுக்கும் உரிய ஆதரவு கிடைக்கவில்லை எனக்கூறிய அவர்,

மாகாணசபைத் தேர்தலில் வாக்காளர்கள் விருப்பமின்றி நடந்துகொண்டமை அவர்கள் மாகாணசபைகள் மீது நம்பிக்கை வைக்கவில்லையென்பதையே கோடிட்டுக்காட்டுவதாகக் கூறினார்.

### மாத்தளை மாவட்டத்தில்

# சிறுபான்மைப் பிரதிநிதித்துவம் இந்தமுறை பறிபோனது

மத்திய மாகாண சபையில் கடந்த 15 வருடங்களாக மாத்தளை மாவட்ட தமிழ், முஸ்லிம் மக்களுக்குக் கிடைத்துவந்த பிரதிநிதித்துவம் இந்தமுறை அற்றுப் போயுள்ளது.

1988 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம் பிரதிநிதியொருவரும், 1993 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் தமிழ்ப் பிரதிநிதியொருவரும், 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் தமிழ்ப் பிரதிநிதியொருவரும் தெரிவாகியிருந்தனர்.

எனினும், கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் மாத்தளை மாவட்டத்திலிருந்து சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த எவரும் தெரிவு செய்யப்படவில்லை.



கிளிநொச்சியில் நடைபெற்ற கப்டன் வானதி வெளியீட்டகத்தின் மூத்த பெண் படைப்பாளிகளைக் கௌரவிக்கும் நிகழ்வில் மாலதி படையணித் தளபதி கேணல் விதுஷா - ஆதிலக்ஷ்மி சிவகுமாருக்கு விருது வழங்கி கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

# போர்நிறுத்த நல்லெண்ணத்தைச் சிதைக்க அரசாங்கம் கருணாவைப் பயன்படுத்துகிறது

## மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவுக்கு அரச வானொலிகளைப் பயன்படுத்த அனுமதி வழங்கியதன் மூலம், அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான போர்நிறுத்த நல்லெண்ணத்தைச் சிதைக்க அரசாங்கம் முயற்சி செய்வது சந்தேகத்திற்கு இடமின்றி வெளிப்படையாகத் தெரிகின்றது.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு கருணா பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியின் மூலம், உண்மை தெளிவாகத் தெரிகின்றது. அதாவது, இலங்கை அரசாங்கம் வசதிகளை வழங்கி தனது சார்பாக எம்மீது மறைமுகமான பிரசாரத்தை மேற்கொண்டுள்ளது. அத்துடன் இராணுவப் புலனாய்வுத் துறையினர் எம்மீது தாக்குதல்களையும் மேற்கொண்டுள்ளனர். இதன் மூலம் போர்நிறுத்தத்திலிருந்து விலகிச் செல்ல நிர்ப்பந்திப்பதற்காகும்.

இவற்றினடிப்படையில் கருணா மூலம் விடுலைப் புலிகளைப் பலவீனமாக்க அரசு முயற்சி செய்வது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபனமாகியுள்ளது. இவ்வாறு பயங்கரவாதத் தாக்குதல்களை எம்மீது நடத்திய எமது இராணுவ மற்றும் அரசியற் செயற்பாடுகளை பலவீனமாக்க நினைத்தால் அது நடை பெறாதகாரியம். நாம் போருக்கு முகம் கொடுக்கத் தயாராகவேயுள்ளோம். அரசாங்கம் இவ்வாறு செயற்படுமாக இருந்தால், அதன் விளைவுகளை சந்திக்க வேண்டிவருமெனவும் அவர் தெரிவித்தார்.

# அமைச்சர்கள், எம்.பிக்களுக்கு விசேட பாதுகாப்புக் குழு!

(கொழும்பு)

கொலை மிரட்டல் விடுக்கப்பட்ட அமைச்சர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஐந்து உளவுப்பிரிவு அதிகாரிகள் கொண்ட விசேட பாதுகாப்பை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்க அமைச்சர்களுக்கும் ,நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கொலை அச்சுறுத்தல்களும், மிரட்டல்களும் விடுக்கப்பட்டு வருகின்றன.

இதனால் தமக்குப் பாதுகாப்பு வழங்குமாறு கோரிக்கை விடுத்ததையடுத்து - அரசு இந்த முடிவை எடுத்துள்ளதாகப் பிரமுகர்களின் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் சோனங்க ஆராச்சி தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மீது தாக்குதல்கள் தொடுக்கப்பட்டால், அவர்களுக்கு இவர்கள் பாதுகாப்பு அளிப்பார்கள் எனவும் தெரிவித்தார். (கே)

# 455 ஓட்டங்களுக்குள் இலங்கை அணி முதல் இனிங்ஸ் ஆட்டத்தை இழந்தது



இலங்கை - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையே அவுஸ்ரேலியாவின் கெய்ன்ஸ் நகரில் இடம்பெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் நான்காவது நாளான நேற்று -

இலங்கை அணி 455 ஓட்டங்களுக்குள் தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

மூன்றாவது நாள் ஆட்டநேர முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 411 ஓட்டங்கள் பெற்றநிலையில் இருந்த இலங்கை அணி - நேற்றைய ஆட்டத்தில் அடுத்தடுத்து விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது.

இதனால் இலங்கை அணி 455 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. டில்ஷான் 35, களுவிதாரண 34, உபுல் சந்தன 19 ஓட்டங்களைப் பெற்றனர்.

முதல் இனிங்ஸில் அவுஸ்ரேலிய அணி சார்பில் ஜிலெஸ்பி, வோன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், மக்ரா 2 விக்கெட்டுக்களையும், கஸ்பரோவிச் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து இரண்டாவது இனிங்ஸ் ஆட்டத்தை அவுஸ்ரேலிய அணி ஆரம்பித்தது. ஆட்டம் தொடங்கிய சற்று நேரத்திலேயே, 8 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஜஸ்ரின் லாங்கர் - சொய்சாவின் பந்துவீச்சில்



களுவிதாரணவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் ஹைய்டனும், பொன்டிங்கும் நிலைத்து நின்று ஆடினர். ஆயினும் 45 ஓட்டங்களைப் பெற்றிருந்த



பொன்டிங் - சொய்சாவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

ஆட்டநேர முடிவில் அவுஸ்ரேலிய அணி 2 விக்கெட் இழப்புக்கு 193 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஹைடன் 68 ஓட்டங்களுடனும், மாட்டின் 51 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். மாட்டின் 52 பந்துகளில் 8 பவுண்டரி, 1 சிக்ஸருடன் 51 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

## பாடசாலை மட்ட கிரிக்கெட்

# பற்றிக்ஸ் - இந்து அணிகள் இறுதிப்போட்டிக்குத் தகுதி!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்.மாவட்டப் பாடசாலை 16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையே நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் அரையிறுதியாட்டங்களில் வெற்றிபெற்று இறுதிப் போட்டியில் விளையாடும் சந்தர்ப்பத்தினை யாழ்.இந்துக் கல்லூரியும், யாழ்.புனித சம்பத்தரிசியார் கல்லூரியும் பெற்றுள்ளன.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற 50 ஓவர்கள் கொண்ட அரையிறுதி ஆட்டங்களின் அடிப்படையிலேயே இந்த இரு பாடசாலைகளும் இறுதிப்போட்டியில் பங்குபற்றும் தகுதியினைப் பெற்றுக்கொண்டன.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் யாழ். இந்துக்கல்லூரிக்கும், யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் - முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணி 190 ஓட்டங்களைப் பெற்றது.

இதில், அணித்தலைவர் மயூரசிரியன் 21 ஓட்டங்களையும், நவயுகன் 29 ஓட்டங்களையும், கஜேந்திரன் 18 ஓட்டங்களையம் பெற்றுக் கொடுத்தனர்.

யாழ்.மத்திய கல்லூரி அணியின் சார்பில் பிரசாத் 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், வாகீசன் 13 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணியினர் 35 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 130 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டமையால் 60 ஓட்டங்களினால் யாழ்.இந்துக் கல்லூரி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. (58)

# கோபா அமெரிக்க கிண்ண போட்டியில் காலிறுதிக்கு பிரேஸில் அணி தகுதி!




(லிமா)

கோபா அமெரிக்க கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப்போட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரண்டு லீக் ஆட்டங்களில்- ஒன்றில் பிரேஸில் அணி வெற்றி பெற்ற அதேவேளை சிலி - பரகுவே அணிகளுக்கிடையேயான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

தென் அமெரிக்க கண்டத்தில் உள்ள நாடுகள் மட்டும் பங்கேற்கும் கோபா அமெரிக்க உதைபந்தாட்டப் போட்டி பெரு நாட்டில் நடைபெற்று வருகிறது. இதில் 12 நாடுகள் கலந்துகொண்டிருக்கின்றன. அவை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

'ஏ' பிரிவில் கொலம்பியா, வெனிசுலா, பொலிவியா, பெரு ஆகிய நாடுகளும், 'பி' பிரிவில் ஆர்ஜென்ரீனா, மெக்சிக்கோ, உருகுவே, ஈக்வடோர் ஆகிய நாடுகளும், 'சி' பிரிவில் பிரேஸில், சிலி, பரகுவே, கோஸ்டரிகா ஆகிய நாடுகளும் இடம்பெற்றுள்ளன.

நேற்றுமுன்தினம் நடந்த ஒரு ஆட்டத்தில் பிரேஸில் - கோஸ்டரிகா அணிகள் மோதின. இதில் பிரேசில் 4:1 என்ற கோல்கணக்கில் அபார வெற்றிபெற்றது. பிரேஸில் அணியில் அட்ரினோ 3 கோலும், ஜுயன் ஒரு கோலும் அடித்தனர். கோஸ்டரிகா அணியில் அனடோனியா கோல்



அடித்தார்.

பிரேசில் பெற்ற 2 ஆவது வெற்றி இதுவாகும். தொடக்க ஆட்டத்தில் அந்த அணி 1-0 என்ற கோல் கணக்கில் சிலியை வென்றிருந்தது.



கோஸ்டரிகா 2 ஆவது தோல்வியைச் சந்தித்தது. தொடக்க ஆட்டத்தில் கோஸ்டரிகா பரகுவேயிடம் தோற்றிருந்தது.

இந்த வெற்றி மூலம் பிரேஸில் காலிறுதிக்குத் தகுதிபெற்றது. பரகுவே - சிலி இடையே நடந்த மற்றொரு ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது.

'சி' பிரிவில் பிரேஸில் 2 வெற்றியுடன் 6 புள்ளிகள் பெற்றுள்ளது. பரகுவே 4 புள்ளியுடனும், சிலி ஒரு புள்ளியுடனும் உள்ளன. கோஸ்டரிகா புள்ளி எதுவும் பெறவில்லை.




# ஒலிம்பிக்கில் பங்குபெறும் வாய்ப்பை ரிம்மொன்ட் கொமரி இழந்தார்!



உலக சாதனை ஓட்டப்பந்தய வீரரான ரிம்மொன்ட் கொமரி எதிர்வரும் எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் பங்குகொள்ளும் வாய்ப்பை இழந்தார்.

அமெரிக்காவில் நடைபெற்ற 100 மீற்றர் ஒலிம்பிக் தகுதிப் போட்டியில் ரிம்மொன்ட் கொமரி - மொலிஸ் கிறீசிடம் தோல்வி கண்டு ஒலிம்பிக் வாய்ப்பை இழந்தார்.

ஏற்கனவே ரிம்மொன்ட் கொமரியின் பெண் நண்பரான ஓட்ட வீராங்கனையான மரியன் ஜோன்ஸும் ஒலிம்பிக் 100 மீற்றர் ஓட்டத்தில் பங்குபெறும் வாய்ப்பைத் தவறவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அஸ்ரா கிண்ணக் கிரிக்கெட் இரண்டாம் சுற்று ஆரம்பம்!

அகில இலங்கை ரீதியில் 16 வயதுப் பிரிவு பாடசாலை அணிப் பிரிவுகளுக்கிடையே நடைபெற்று வருகின்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ்.மாவட்டத்திலிருந்து போட்டியிட்ட 10 பாடசாலை அணிகளிலிருந்து ஆறு அணிகள் இரண்டாம் சுற்று ஆட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளன.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளிலிருந்து இரு அணிகளை யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவு செய்வதற்கான போட்டிகள் விலகல் முறையில் நடைபெற்று வருகின்றன.

இந்தப் போட்டித்தொடர் வரிசையில் கடந்த சனிக்கிழமை - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 50 ஓவர் கொண்ட போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி இலகுவாக வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணியினர் 46.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 215 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் சார்பில், கிரிசாந் 58 ஓட்டங்களையும், மயூரன் 48 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

விக்ரோறியா அணியின் சார்பில் சங்கர் 29 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், கனரூபன் 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியாக் கல்லூரி அணியினர் 31 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் 109 ஓட்டங்களை மட்டுமே பெற்றமையால், 106 ஓட்டங்களால் யாழ்ப்பாணக் கல்லூரி அணியினர் வெற்றிபெற்றனர்.

இதில், விக்ரோறியா அணி வீரர் றதன் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களையும், கனரூபன் 19 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

யாழ்ப்பாணக் கல்லூரி வீரர் ஜதுசன் 35 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், கிரிசாந் 19 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியில், வெற்றி பெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும், சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெறும் போட்டியிலிருந்து ஓர் அணியும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும், ஸ்கந்தவரோதயா கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெறும் போட்டியிலிருந்து வெற்றிபெறும் அணி யாழ்.மத்திய கல்லூரியுடன் மோதி- அதில் வெற்றிபெறும் ஓர் அணி தெரிவுசெய்யப்பட்டு அஸ்ரா கிண்ண மூன்றாம் சுற்றில் கலந்துகொள்ளும். (58)

# 7 அடி உயர வெற்றிக் கேடயத்தை சென்.அன்ரனீஸ் கைப்பற்றியது

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கம், தமிழீழ விளையாட்டுத்துறை ஆகியவற்றின் ஆதரவுடன் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் நடத்திவந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகமும், மணற்காடு சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகமும் மோதின.

இதில் மனோகரா விளையாட்டுக்கழக அணி 6 ஆவது நிமிடத்தில் கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியாகப பயன்படுத்தத் தவறியது. சுறுசுறுப்பாக விளையாட்டு நடைபெற்றுக் கொண்டிருந்த ஆட்டத்தின் 21 ஆவது நிமிடத்தில் மனோகரா கோல் காப்பாளரால் பிடிக்கப்பட்ட பந்து நழுவ, அதனை அன்ரனீஸ் விளையாட்டுக்கழக வீரர் யோகன் மிக அற்புதமாகக் கோலாக்கினார்.

அதனைத் தொடர்ந்து 24 ஆவது நிமிடத்தில் மேலும் ஒரு கோல் அடிக்கப்பட்டது. இடைவேளைக்கு முன்னர் 2:0 என்ற நிலையில் அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் முன்னிலையில் நின்றது. இடைவேளை முடிந்து ஆட்டம் தொடரப்பட்டபோது சென் அன்ரனீஸ் வீரன் இருதயராஜ் 9 ஆவது நிமிடத்திலும், 20 ஆவது நிமிடத்திலும் இரண்டு கோல்களை அடித்தார்.

இதனால் 4:0 என்ற கோல் கணக்கில் மனோகரா விளையாட்டுக்கழகத்தைத் தோற்கடித்து சென் அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இதன் தொடர் ஆட்டநாயகனாக டயமன்ஸ் விளையாட்டுக்கழக வீரன் பிரியாங்கனும் இறுதியாட்டதில் ஆட்டநாயகனாக சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக வீரன் வலன்ரன் கமலதாஸும், சிறந்த கோல்காப்பாளர், சிறந்த கோல் உதைப்பாளர்களுக்கான பரிசில்களை சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக வீரர்கள் விஜயசுகுமார், விக்ரர் இருதயராஜ் ஆகியோரும் பெற்றுக்கொண்டனர். (12)



யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று மாகாண மட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள யாழ்.யூனியன் கல்லூரியின் 17 வயதுக்குட்பட்ட வலைப்பந்தாட்ட அணியினரைக் காணலாம்.

## ஹொக்கி சுற்றுப்போட்டி

யாழ்பல்கலைக்கழக விளையாட்டு அவையின் ஏற்பாட்டில் - யாழ்.மாவட்ட கழகங்களுக்கிடையில் நடைபெற்று வரும் ஹொக்கி சுற்றுப் போட்டியில் -

இன்று பிற்பகல் 4 மணிக்கு கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்றலைட்ஸ் கழக அணியும் பிற்பகல் 5 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து விஞ்ஞான விளையாட்டு அணியும் மோதவுள்ளன.

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்தும் ஏபிசி லீக் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகலில் இருந்து ஆட்டங்கள் யாழ். பொது விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

பிற்பகல் 4.15 மணிக்கு யுத்தூர்மல் அணியை எதிர்த்து கிறிஸ்கிங்ஸ் அணியும், பிற்பகல் 5.15 மணிக்கு சென்.மைக்கல் அணியை எதிர்த்து பாடுமீன் அணியும் மோதவுள்ளன.

# பேசாலையில் இந்திய படகுமீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்

பேசாலைக் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்களின் விசைப்படகின் மீது, இலங்கை மீனவர்கள் பெற்றோல் குண்டு வீசியதில் அந்தப் படகு எரிந்து கடலில் மூழ்கியதாக தமிழகச் செய்தி யொன்று தெரிவித்தது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

இராமேஸ்வரத்தில் இருந்து கடந்த சனிக்கிழமையன்று சுமார் 300 வரையான விசைப் படகுகளில் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க வந்தனர்.

இதில் இராமேஸ்வரத்தில் வசிக்கும் கந்தசாமி என்பவருக்குச் சொந்தமான படகில் வந்த நான்கு பேர் பேசாலைக் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அங்குவந்த இலங்கை மீனவர்கள் அந்தப் படகை மடக்கிப் பிடித்து அதிலிருந்த நான்கு பேரையும் வேறொரு மின்பிடிப் படகுக்கு மாற்றிவிட்டு, அவர்கள் வந்த படகின் மீது பெற்றோல் குண்டை வீசினர். இதனால் படகு முற்றாக எரிந்து கடலில் மூழ்கியது.

இதனையடுத்து உயிர் தப்பிய நான்கு மீனவர்களும் நேற்றுமுன்தினம் ராமேஸ்வரத்துக்கு திரும்பி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த நிலையில் படகுமீது வெடிகுண்டு வீசப்பட்டது குறித்து புலனாய்வுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



நெடுந்தீவு அரச அதிபர் பணிமனைக்குப் பின்புறமாகக் கட்டப்பட்ட விடுதியை மேலதிக அரச அதிபர் தலைமையிலான குழுவினர் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

## ஆட்களற்ற வீடொன்று விஷமிகளால் தீ வைப்பு

(கந்தரோடை)

ஆட்களற்ற வீடொன்றை விஷமிகள் சிலர் தீ வைத்துக் கொழுத்தியதில் அந்த வீடு முற்றாக எரிந்து நாசமானது. இந்தச் சம்பவம் இரு தினங்களுக்கு முன்பு கந்தரோடையில் நடைபெற்றது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

கந்தரோடை மாசியப்பிட்டி வீதிக்கு அருகாக வடக்குப் புறமாக அமைந்துள்ள இந்த வீட்டில் இதுவரை காலமும் குடியிருந்தவர்கள் வன்னிப் பகுதிக்குக் குடிபெயர்ந்து சென்றுள்ளதாகவும், இதனால் இந்த வீட்டில் எவரும் வசிக்கவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது.

வீட்டில் ஆட்களற்ற சமயத்தைப் பாவித்த சில விஷமிகள் வீட்டுக் கூரைக்குத் தீ வைத்ததில் அது முற்றாக எரிந்து சாம்பலானது. ஓலையினால் வேயப்பட்டிருந்த கூரையில் தீ பற்றியதும் அது வீடு முழுவதும் பரவிக்கொண்டது. இதனால் ஐம்பதாயிரம் ரூபாவுக்குக் குறையாத பெறுமதியுடைய கூரை மரங்கள் எரிந்து நாசமாகின.

தீயை அணைப்பதற்கு அயலவர்கள் முயற்சித்தபோது அதனைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விட்டது. வீட்டில் பொருள்கள் எதுவும் இல்லாமையால் பொருட்சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக மனிதநேயமிக்க பலரும் அதிருப்தியை வெளியிட்டனர். (94)

## மனித உரிமைகள் தொடர்பான கருத்தரங்கு

மனித உரிமைமீறல், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பன தொடர்பாக - மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் எதிர்வரும் 19 ஆம், 20 ஆம் திகதிகளில் சாவகச்சேரி சந்தை மேல்மாடி கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைவரையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் அறிவித்தார். (29)

## சமகால அரசியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாணவர் பேரவை நடத்தும் சமகால அரசியல் கருத்தரங்கின் 15 ஆவது தொடர், இன்று பிற்பகல் மூன்று மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் 'சமகாலமும் சமூக அபிவிருத்தியும்' என்ற பொருளில் வணிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ரட்ணம் கருத்துரை வழங்கவுள்ளார்.

## உதவி அரச அதிபர் விடுதியை இயங்க வைக்க நடவடிக்கை

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை விடுதியை இயங்க வைக்க நடவடிக்கை எடுப்பதாக யாழ். மேலதிக அரச அதிபர் சிவசாமி உறுதியளித்தார்.

இங்கு பணியாற்றும் வெளியிடங்களைச் சேர்ந்த அலுவலர்கள், தங்குமிட வசதியின்றி பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

கடந்தகால போர் அனர்த்தங்களுக்கு முன்னர் இந்தப் பணிமனைக்குப் பின்புறத்தில் விடுதியை அமைப்பதற்கான கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

பின்னர் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கட்டடவேலைகள் இடைநிறுத்தப்பட்டதுடன், கட்டப்பட்டிருந்த கட்டடங்களும் சேதமடைந்துள்ளன.

இந்த நிலையில் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு, அண்மையில் நெடுந்தீவுக்குச் சென்றிருந்த அரச அதிபர் தலைமையிலான குழுவினர் இந்தக் கட்டடத்தைப் பார்வையிட்டதுடன், இதனைக் கட்டிமுடித்து - உத்தியோகத்தர்களுக்கான விடுதிவசதியை ஏற்படுத்திக்கொடுக்க நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரிவித்தார். (113)

## கருத்தரங்கு

'அரசாங்க மாற்றமும், இலங்கை இனத்துவப் பிரச்சினையிலான இந்திய நிலைப்பாடும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று, இன்று பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பொருளியற்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் புதுடெல்கியைச் சேர்ந்த தொல்பொருள் நிலை முதனிலை ஆய்வாளர் சிறி மோகன்கேரிக் கருத்துரை வழங்கவுள்ளார்.

## தூண்டி இந்து மயானத்தை புனரமைக்கும் பணி ஆரம்பம்

கொழும்புத்துறை தூண்டி மயானத்தைத் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தகாலங்களில் நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக இந்த மயானம் புனரமைக்கப்படாமல் அழிவுற்ற நிலையில் காணப்பட்டது. இதனால் ஈச்சமோட்டை, பாண்டியன் தாழ்வு, கொழும்புத்துறை, கொய்யாத்தோட்டம் முதலான பகுதிகளில் வசிக்கும் மக்கள் இறந்தவர்களின் உடல்களைத் தகனம் செய்வதற்குப் பெரும்சிரமங்களை அனுபவித்து வந்தனர்.

இதனையடுத்து இந்த மயானத்தைப் புனரமைத்துத் தருமாறு, பொது மக்கள் பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்.

இதனால் கடந்தவாரம் இந்த மயானத்தைப் புனரமைப்பதற்கான விசேட கூட்டம் ஒன்று யாழ். பிரதேச செயலர் .எஸ்.செந்தில்நந்தனன் தலைமையில் நடத்தப்பட்டு, அதில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவென விசேட குழுவொன்று அமைக்கப்பட்டது.

அந்தக் குழுவின் முயற்சியாலேயே தற்பொழுது இந்த மயானம் புனரமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (58)

வலி. தெற்கு பிரதேசசபை நூலகத்தில்

## அடிப்படை வசதிகளை ஏற்படுத்த வாசகர் கூட்டத்தில் கோரிக்கை

(உடுவில்)

வலி. தெற்குப் பிரதேச சபையின உடுவில் உப அலுவலக நூலகத்தின் வாசகர் வட்டக்கூட்டம் - நூல்நிலைய மண்டபத்தில் நூலகர் கு. வைகுந்தவாசன் தலைமையில் நடைபெற்றது.

ஏராளமான வாசகர்வட்ட அங்கத்தவர்கள் கலந்து கொண்டு நூலகத்தின் தேவை, நூலகத்தின் அபிவிருத்தி குறித்துப் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

மேற்படிப்புக்கான நூல்கள் பல பற்றாக்குறையாக இருப்பதாகவும், நூல்களைப் பாதுகாக்க அலுமாரிகள் பற்றாக்குறையாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

நூலகத்தின் அருகில், மருதனார்மடம் சந்தை அமைந்துள்ளதால் - நூலக அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டுள்ளதாகவும், பத்திரிகைகள், கதைப்புத்தகங்களை மன ஒருமைப்பாட்டுடன் படிக்க முடியாதிருப்பதால், நூலகத்தை வேறிடத்துக்கு மாற்றவேண்டும் அல்லது கட்டடத்தை விஸ்தரித்து அமைதியான கற்றல் செயற்பாடுகளை மாணவர்களும், பொதுமக்களும் மேற்கொள்ள நடவடிக்கைகளை உடனடியாகச் செயற்படுத்த வேண்டுமென நூலகரைக் கேட்டுக்கொண்டனர். (101)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

பத்தாவது அகவையில்



பெயர் : கீ. அச்சுதன்
முகவரி : டச்சு வீதி, சாவகச்சேரி.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்


வலி. வடக்குப் பிரதேசத்தில்

## கூரைகள் இன்றிக் காணப்படும் அந்தோனியார் தேவாலயங்கள்

வலி. வடக்கின் காங்கேசன் துறை, ஊரணி அந்தோனியார் தேவாலய கூரைகள் அகற்றப்பட்டுள்ளதாக அந்தப் பகுதிக்குச் சென்று திரும்பிய மக்கள் தெரிவித்தனர்.

சமீபத்தில் நடைபெற்ற இந்த ஆலயத் திருநாளுக்கு அந்தப் பகுதி மக்கள் சென்றுவர, படையினரால் அனுமதி வழங்கப்பட்டதை அடுத்து, திருநாளில் கலந்துகொள்ளச் சென்றபோதே ஆலயக்கூரைகள் அகற்றப்பட்டிருப்பதைக் கண்டுவந்துள்ளனர்.

ஆலயத்தின் பலிபீடப் பகுதியான போம் அமைந்துள்ள இடத்தில் மட்டுமே கூரைத்தகடுகளும், மரங்களும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கதவுகள், ஜன்னல்கள் இன்றி இந்த ஆலயம் காணப்படுவதாகவும், வீடுகள் சேதப்படுத்தப்படாமல் இருப்பதாகவும், பெரிய வீடுகளில் படையினர் தங்கி இருப்பதாகவும் பொது மக்கள் தெரிவித்தனர். (206)

## பிரதம நீதியரசருக்கான பாதுகாப்பு குறித்து ஆய்வு!

யாழ்.நீதிமன்ற கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் விழா தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று, நேற்றுமுன்தினம் யாழ். மாவட்ட உயர்நீதிமன்ற கட்டடத்தில் நடைபெற்றுள்ளது.

யாழ். மாவட்ட உயர்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் - யாழ் மாவட்ட படைத்தளபதி சுசில் சந்திரபால, யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குமாரநாயக்க, மற்றும் 512 ஆவது படையணியின் அதிகாரிகள், யாழ். மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா உள்ளிட்ட பலரும் கலந்துகொணடனர்.

யாழ். நீதிமன்றத்துக்கான புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் விழாவுக்கு பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா வருகை தரவுள்ளதால், அவருக்கான பாதுகாப்பு வழங்கல் மற்றும் விழா ஒழுங்குகள் குறித்து இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## சின்னஞ்சிறு செய்திகள்

### கும்பாபிஷேகம்

ஆனைக்கோட்டை கண்ணகை அம்பாள் தேவஸ்தான பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை காலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

### வீரபத்திரர் கோயில் மகா கும்பாபிஷேகம்

நாவற்குழி வெண்ணெயன் கட்டு ஸ்ரீ வீரபத்திரர் கோயில் மகா கும்பாபிஷேகம் - நாளை புதன் கிழமை காலை 8.24 மணிக்கு இடம்பெறவுள்ளது. இன்று காலை 9.00 மணி முதல் எண்ணெக்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

சிவஸ்ரீ நாகரெட்ண ஹரீந்திரக் குருக்கள் கிரியைகளை நடத்துவார். (24)

### கைதடியில் பற்றைகள் அழிப்பு

ஏ - 9 வீதியில் கைதடி வீதியோரங்களில் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த பற்றைகள், முட்புதர்கள், வீதி அபிவிருத்தி அதிகாரசபையினரால் அகற்றப்பட்டு வருகின்றது.

கைதடிப்பகுதியில் இருந்து யாழ். நகரை நோக்கிக் காணப்படும் எருக்கலை, சம்புண்பா ஆகியன கடந்த சில நாட்களாக அகற்றப்பட்டு வருகின்றது. (24)

### சுன்னாகம், சாவகச்சேரி மினிபஸ் சேவையை முகமாலைவரை நீடிக்கவும்

(தென்மராட்சி)

சுன்னாகம், புத்தூர், கனகம் புளியடி ஊடாக சாவகச்சேரிவரை இடம்பெற்றுவரும் மினிபஸ் சேவையினை முகமாலைவரை நீடிக்குமாறு, பயணிகள் - தென்மராட்சி மினிபஸ் சங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த இடங்களில் இருந்து முகமாலைக்குச் செல்வோர் மற்றும் மினிபஸ்ஸிற்குக் காவல் நிற்பதால், பலத்த சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

ஆகையால் இந்தப் பகுதியூடான பஸ்சேவையை முகமாலை வரை நீடிக்குமாறு அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (29)

### நடுவப் பணியக திறப்பு விழா நாளை

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள, யாழ்.மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத்துக்கான நடுவப் பணியகம் நாளை காலை 10 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.




# எலிகளில் சோதனை

**18** மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களை, மிருகங்களைப் பரிசோதனை செய்யும் ஆராய்ச்சிகளுக்காக, பிரித்தானிய மிருகங்கள் பரிசோதிக்கும் நிலையம் ஒதுக்கியிருக்கின்றது. அந்த வகையில் 65,000 எலிகள் பிடிக்கப்பட்டு ,பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. மனிதர்களுக்கும், எலிகளுக்குமிடையில் நிறமூர்த்தங்களில் ஏதோ ஒரு தொடர்பு இருக்கின்றது என விஞ்ஞானிகள் கருதுகின்றார்கள்.



இதன் காரணமாக மனிதரில் செய்யக் கூடிய எல்லா ஆராய்ச்சிகளும் முதலில் எலியிலேயே செய்யப்படுகின்றன. மனிதர்களில் ஏற்படக்கூடிய பல்வேறுபட்ட நோய்களுக்கான சிகிச்சை முறைகள் - முதலில் எலிகளுக்கே கொடுக்கப்படுகின்றன.

தற்போது புற்றுநோய்களுக்குரிய சிகிச்சை முறைகளும் எலிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எலிகளில் செய்யப்பட்ட சோதனைகளின்படி, மலேரியா மற்றும் கசம் ஆகிய நோய்களுக்கான நல்ல மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன.

பலதரப்பட்ட அற்புதமான மருந்துக்கண்டு பிடிப்புகளும் மருத்துவ ஆராய்ச்சி நிலையம் (எம்.ஆர்.சி) என்று சொல்லப்படுகின்ற நிறுவனத்தாலேயே மேற்கொள்ளப்பட்டு, வெற்றியும் அடைந்திருக்கின்றன. ♦

# உயிர்கொல்லும் மருந்துகள்

நோயைக் குணமாக்கப் பாவிக்கின்ற மருந்துகள் - தற்போது மக்களைக் கொல்லத் தொடங்கியிருக்கின்றன. ஏறக்குறைய 10,000 மக்கள் வரை இறந்திருக்கின்றார்கள்.

பிரித்தானியாவில் லிவர்பூல் பல் கலைக்கழகத்தின் ஆய்வாளர்கள் நவம்பர் 2001 ஆம் ஆண்டிலிருந்து- 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் வரை செய்த ஆய்வுகளின்படி 18,820 மக்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருந் தார்கள். ஏனெனில், அவர்கள் பாவித்த மருநதுகளே அவர் களை வைத்திய சாலைகளுக்கு அனுப்பி இருந்தன.



அவற்றிலே கூடுதலாக அஸ்பிரின் மாத்திரைகள் பாவித்தவர்களே அனுமதிக கப்பட்டிருந்தார்கள். அவர்களால் சிலர் இறந்தும் இருந்தார்கள். 1225 மக்கள் தற்போதும் இந்த மருந்தின் பக்க விளைவுகளை அனுபவித்துக் கொண்டு வருகின்றார்கள்.

இந்த மருந்தின் ஒரு விளைவு வயிற்றின் உட்பகுதியில் இரத்தக்கசிவினை ஏற்படுத்துவதாகும். சிலவேளைகளில் அளவுக்கதிகமாகப் பாவிக்கப்படும் மருந்துகளும் மக்களின் உயிருக் உலை வைக்கின்றன.

போலி மாத்திரைகளும் இந்தப் பிரச்சினையை ஏற்படுத்துகின்றன. தற்போது ஐரோப்பிய நாடுகளில் கணினி மூலம மருந்து வகைகள் எல்லாம் பரிசோதிக்கப்பட்டே வழங்கப்பட்டு வருகின்றன. ♦

# புதுமையான வோக்மன்




இலத்திரனியல் சாதனங்கள் உற்பத்தி செய்வதில், உலகளாவிய ரீதியில் முன்னணியில் திகழ்கின்ற சொனி நிறுவனம் - அப்பிள் கம்பனியுடன் சேர்ந்து செய்யப்பட்ட டிஜிற்றல் வோக்மன், 2001 ஆம் ஆண்டளவில் சந்தைக்கு வந்திருக்கின்றது. இது 3000 இற்கும் அதிகமான பாடல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

ஜப்பான் நாட்டுத் தயாரிப்பான இந்த வகையான வோக்மன்கள் - தற்போது அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் மக்களால் பாவிக்கப்படுகின்றன. இந்த வகையான வோக்கமன்கள் - கிரடிட் காட்கள் அளவில் வந்திருக்கின்றது.

இவைகள் மேலும் சிறப்பாக வடிவமைக்கப்பட்டு, ஏறக்குறைய 10,000 பாடல்கள் வரை பதியக்கூடிய வகையில் உருவாக்கப்படும் என தொழில்நுட்பவியலாளர்கள் கூறுகின்றார்கள்.



இதில் காணப்படுகின்ற எல்லாப் பாடல்களும் எம்பி 3 வகைகளுக்குரியதாகவே அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், அளவில் சற்றுப் பெரியதாக இது அமையும் எனக் கூறப்படுகின்றது.

இதில் காணப்படுகின்ற பற்றரி 30 மணித்தியாலங்களுக்குத் தொடர்ச்சியாக இயங்கக்கூடியது. என்.டபிள்யூ. எச்.டி 1 என்ற பெயர்கொண்ட இந்த வகை வோக்மன்கள் - இதுவரை விற்பனை செய்யப்பட்ட 340 மில்லியன் வோக்மனிலும் பார்க்க வித்தியாசமானதுதான்.

# 3 ஜி எதிர் வொடபோன்

**ஆ**ரஞ்சு 3 ஜி கம்பனி ஒரு புதியவகை ரெலிக்கொம் சேவையை ஐரோப்பிய நாடுகளில் பரவவிட்டிருக்கின்றது. ஐரோப்பிய மொபைல்போன் பாவனையாளர்கள் கூடுதலாக 3 ஜி சேவைகளைப் பாவிக்கத்தொடங்கியிருக்கிறார்கள்.

இதன் காரணமாக வொடபோன் நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள் 3 ஜி பக்கம் சாய ஆரம்பித்திருக்கின்றார்கள். 3ஜி சேவைகளை லப்டப் கணினிகள் மூலம் பெறக கூடிய வசதிகளும் காணப்படுகின்றன.



ஆனாலும், 3ஜி மற்றும் வொடபோன் ஆகிய இரண்டும் சமமான நிலையிலேயே வாடிக்கையாளர்களைக் கொண்டிருக்கின்றது என தொழில் நுட்பவியலாளர்கள் கருதுகிறார்கள்.

அடுத்தவருடம் வொடபோன் கம்பனி தன்னுடைய வாடிக்கையாளர்களை 30 வீதத்திலிருந்து 50 வீதத்துக்கு அதிகரிக்கும் எனவும், ஆனால் 3ஜி கம்பனி 80 வீதமாக அதிகரிக்கும் எனவும் கருதப்படுகின்றது. இரண்டிலும் ஜிபிஆர்எஸ் சேவைகள் காணப்படுகின்றன எனினும், 3ஜி இல ஜிபிஆர்எஸ் திறன் மிகவும் கூடியதாகவும் காணப்படுகின்றது. 3ஜி சேவைகளை தற்போது ஸ்பெயின், இத்தாலி மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளும் பயன்படுத்தத் தொடங்கி இருக்கிறார்கள். இதேவேளை சொனி, எரிக்சன் மற்றும் எல்ஜி கம்பனிகள் இந்த 3 ஜி சேவைகளை விநியோகிக்கின்றன.

# கிரக நட்சத்திரக் கண்டுபிடிப்பு



**ஹ**பிள் விண்வெளித் தொலைகாட்டி 100 கிரகங்கள் மற்றும் நட்சத்திரக் கூட்டங்களை எங்களுடைய பால்வீதியில் கண்டுபிடிக்கும் என விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

இப்படிக்கண்டு பிடிக்கப்பட்டால், அது தற்போது எமது பால்வீதியில் காணப்படுகின்ற கிரகங்கள் மற்றும் நட்சத்திரக்கூட்டங்களின் எண்ணிக்கையின் இரட்டை மடங்கு ஆகிவிடும்.

இத்தகைய கண்டுபிடிப்பு மற்றைய பால்வீதியிலுள்ள எஞ்சியுள்ள கிரகங்கள் மற்றும் நட்சத்திரக் கூட்டங்களுக்கான கண்டுபிடிப்புக்களுக்கு ஒரு உந்துதலாக அமையும் எனக் கருதப்படுகின்றது.

இந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுமெனில், பெருமளவு கிரகங்கள் கண்டு பிடிக்கப்படும். சில நட்சத்திரக்கூட்டங்கள் ஹபிள் தொலைகாட்டியில் தெரிகின்றன. ஆனாலும், அவற்றை பிரகாசமானதாகப் பார்க்கமுடியாதுள்ளது.

ஏனெனில், அவை ஓரளவு உடனேயே தென்படுகின்றன. தற்போது கடுமையான ஆய்வுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற ஆய்வாளர்கள் - செப்ரெம்பர் அல்லது ஒக்டோபர் மாதமளவில் இந்தக் கிரகங்கள் மற்றும் நட்சத்திரக் கண்டுபிடிப்புகளில் சாதகமான விளைவுகளைக் கொடுப்பார்கள் எனக் கூறலாம். ♦

# திரை விமர்சனம்



## கனவு மெய்ப்பட வேண்டும்



'குட்டி' படத்தின் மூலம் சிறந்த இயக்குநருக்கான சிறப்பு தேசிய விருதுபெற்ற ஜானகி விஸ்வநாதனின் இரண்டாவது படம் 'கனவு மெய்ப்படவேண்டும்'

வஞ்சிக்கப்பட்ட இனத்தில் பிறந்த ஒருவன் தனக்கு கிடைத்த வளமான வாழ்க்கையை உதறித் தள்ளிவிட்டு, தனது இனத்தை உயர்த்துவதற்கு செய்த தியாகமே இந்தப் படத்தின் கரு.

'நியூ டெல்லி ரைம்ஸ்' பத்திரிகை நிருபரான நந்திதா- எதிர்ப்புகளுக்கு அஞ்சாத துணிச்சலான பெண். டாக்டர் மோகனசுந்தரத்தின் வாழ்க்கையை ஆய்வு செய்ய நந்திகா - டெல்கியிலிருந்து தமிழ்நாட்டுக்கு வருகின்றார்.



அங்கே தன் தாயைக் கொடுமைப்படுத்திய கொடுமைக்கார அப்பா - இந்த மோகனசுந்தரம் தான் எனத் தெரிந்து கொள்கின்றார் நந்திதா.

பின்பு வருகின்ற பழைய கதையைப் பாட்டி மூலம் நந்திதா அறிந்துகொள்கின்றார். தாசி வரலட்சுமி (ரம்யா கிருஷ்ணன்) மகள் மோகனசுந்தரம் - சினிமாவில் நடிப்பதற்காக சென்னை வந்த தாயைப் பார்க்க, திருடடு ரயிலேறியவளை, சிறுவர் சீர்திருத்த விடுதிக்கு நீதிமன்றம் அனுப்புகிறது.

விடுதி மேற்பார்வையாளரான சுந்தரபாண்டியன் (ஹன்ஸ் கௌசிக்) இவரை டாக்டர் மோகனசுந்தரம் (அஸிசர்மா) ஆக்குகின்றார். உடன் படித்த ஹேமா (லட்சுமி கோபாலசாமி) மோகன சுந்தரத்தின்மேல் காதல் கொண்டு, பலத்த எதிர்ப்புகளின் மத்தியில் இருவரும் திருமணம் செய்கிறார்கள்.

இருவரும் அமெரிக்கா போகவேண்டும் என்ற திட்டத்துடன் இருக்கும்பொழுது, மோகனசுந்தரம் தன்னுடைய சொந்தக் கிராமத்துக்குப் போகிறார். அங்கே எல்லோரும் விபச்சாரத்தையே நம்பி வாழ்வதை அவர் காண்கின்றார். இதனால் அமெரிக்கப் பயணத்தைக் கைவிட்டு, தன்னுடைய சொந்தக் கிராம மக்களைக் கரையேற்றுவதற்காக சில செயற்பாடுகளைச் செய்யும்போது, மனைவியுடன் மோதல் வருகின்றது.

எப்படி மக்களை மீட்டார் என்பதுதான் மீதிக்கதை. ஊரிலுள்ள எல்லாக் குழந்தைகளும் மோகனசுந்தரத்தை அப்பா என்று கூப்பிடுவதும், ஆனால் சொந்த மகள் அப்பாவை அழைக்க முடியாது தவிர்ப்பதும் நல்ல காட்சியமைப்பு. கதாநாயகன் அஸிம்சர்மா நல்ல நடிப்பு. மறைந்த இசையமைப்பாளர் மகேஷின் இசையமைப்பு மிகவும் ரசிக்கத்தக்கது. குறைந்த செலவில் சி.கே.ராஜ்குமாரின் நிறைந்த ஒளிப்பதிவு ஆர்ட் டைரக்டர் ராஜா ரவிவர்மாவின் கலையமைப்பில் அழகும் எளிமையும் காணப்படுகின்றது. படத்தொகுப்பு சுரேஷ் அர்ஸ் இன்றும் சற்றுக் கவனம் செலுத்தியிருக்கலாம். தமிழ் சினிமாவின் தரத்தை தாழ்த்தாது வெளிவந்த படம் இது. உண்மையில் கனவு நனவாகிவிட்டது. - P.N.S

## அணுசக்திப் பாவனை



ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் ஒரு காலத்தில் அணுப்பாவனையைத் தடைசெய்திருந்தது. ஆனால், அது இப்போது எல்லாநாடுகளும் அணுவினைப் பயன்படுத்தக்கூடியநிலை எதிர்காலத்தில் உருவாகுமென எதிர்வுகூறுகின்றது. சர்வதேச அணு ஏஜென்சியுடைய எதிர்வு கூறலும் இதேபோன்றுதான் இருக்கின்றது. ஆசியநாடுகளில் அணுசக்திப் பாவனை மிகவும் குறைவாக இருந்தது. ஆனால், எதிர்காலத்தில் ஆசியநாடுகளும் அணுசக்திப் பாவனையை மேற்கொள்ளும் எனக் கருதப்படுகின்றது.

உலகளாவிய ரீதியில் 1/6 பங்கு மின்சக்தி அணுவின் மூலம் உருவாக்கப்படுகின்றது. ஆனால், 2030 ஆம் ஆண்டளவில் உலகத்தின் முழு மின்சக்தியில் 1/4 பங்கினை அணுசக்தியே பிரதிநிதித்துவப்படுத்தும் என விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். ஆனால், எரிபொருள்களால் வருகின்ற காபனீரொட்சைட்டின் அளவு நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது. அணுசக்திப்பாவனையால் வருகின்ற காபனீரொக்சைட்டின் அளவு மிகவும் குறைகின்றது. ஆசியாவில் மட்டும் தற்போது 22 அணுசக்தி மையங்களை உருவாக்குகின்ற திட்டம் இருக்கின்றது.

இதனால் அணுசக்திப் பாவனை - பூமியின் வெப்பநிலையை அதிகரிக்கும் என சூழலியலாளர்கள் அஞ்சுகின்றார்கள்.

## அற்ககோல் மருந்து



அற்ககோல் பாவனை பெண்களின் எலும்பு வளர்ச்சியை அதிகரிக்கின்றது. அத்துடன், பெண்களுக்கு. ஏற்படும் எலும்பு சம்பந்தமான நோய்களைக் குணமாக்கக் கூடிய இயல்புகளை அற்ககோல் கொண்டிருக்கின்றது.

ஆராய்ச்சியாளர்கள் 46 இரட்டையர்களை எடுத்து செய்யப்பட்ட ஆயவுகளின்படி, நன்கு அற்ககோல் பாவித்த பெண்களுக்கு எலும்பு சம்பந்தமான நோய்கள் ஏற்படவில்லை. அற்ககோல் பாவிக்காத பெணகளுக்கு ஏற்பட்டிருந்தன.

வாதசம்பந்தமான நோய்களைக்கூட இவை குணமாக்குகின்றன எனக் கருதப்படுகின்றது. ஆனால், புகைப்பிடித்தல் பழக்கமுடையவர்களுக்கு வாதநோய்கள் கூடுதலாக ஏற்படுகின்றன எனக் கூறப்படுகின்றது. ஆண்கள் அற்ககோல் பாவிப்பதை வெறுகின்ற இந்தச் சமுதாயம் பெண்கள் அற்ககோல் பாவிப்பதை ஏற்றுக்கொள் ளுமா? ஆகவே, அற்ககோலுக்கு சமமான ஒரு மருந்தை உருவாக்கவேண்டியதேவை இருக்கின்றது. அதேவேளை அற்ககோல் பாவித்த எல்லாப் பெண்களுக்கும் எலும்பு சம்பந்தமான நோய்கள் குணமாகவில்லை என்ற குறையும் இருக்கின்றது. இருந்தபோதிலும், உடல் உறுப்புகளைப் பாதிக்கின்ற அற்ககோல் மருந்தாவது வரவேற்கத்தக்கது.

## நோயாளிகளுக்கு மருந்து மொபைல் போன்

இவ்வளவு காலமும் வைத்தியசாலைகளில் கையடக்கத் தொலைபேசிப் பாவனை தடையாக இருந்தது. ஆனால், தற்போது பிரிட்டிஷ் மருத்துவசபை தங்களுடைய வருடாந்தக் கூட்டத்தில் - நோயாளிகள் கையடக்கத்தொலைபேசி பாவிக்கலாம் என்று அனுமதி வழங்கியிருக்கிறார்கள். இப்படி அவர்களைத் தொடர்புகொள்ள விடுவதானால், நோயாளிகள் ஒரு மறைமுகக் கவனிப்பைப் பெறுகின்றார்கள்.




சில வைத்தியர்கள் கூறுகிறார்கள் - கையடக்கத் தொலைபேசிகள், மிகச் சிறந்த மருத்துவ சாதனங்கள் என்று. அவசர சிகிச்சை மற்றும் தீவிர கவனிப்பு சிகிச்சை நோயாளிகள் தங்களுடைய கவலையை மறந்து, சுகமாக இருப்பதற்கு கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துகிறார்கள். உளநோய்க்கும் இதுஒரு சிறந்த மருந்தாகும். அத்துடன், எல்லோருக்கும் நோயாளியுடனேயே இருக்கிறார்கள் என்ற உணர்வு ஏற்படுகின்றது.

இதேவேளை, சில வைத்தியர்கள் மொபைல் தொலைபேசிப் பாவனையால், வைத்திய உபகரணங்கள் சில பாதிப்படையலாம் எனக் கூறுகிறார்கள். ஆனாலும், வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளிகள் இப்போது கையடக்கத் தொலைபேசிகளுடன் செல்லும் நிலை உருவாகியிருக்கின்றது.

## ஆமைகளின் எதிரிகள் உல்லாசப் பயணிகள்

கிரேக்கத்திலே உல்லாசப் பயணிகளின் வருகையால், அங்கே காணப்படுகின்ற அரிதான ஆமையினங்கள் அழிகின்ற நிலைதோன்றியிருக்கின்றது.

இன்ரெநெற் மூலம் தொழிற்படுகின்ற இயற்கை அமைப்பு ஒன்று இந்த வகையான ஆமையினங்கள் பற்றி ஓர் ஆராய்ச்சி செய்திருக்கின்றது. அதன் மூலம் உல்லாசப் பயணிகள் கடற்கரைகளைப் பெருவாரியாகப் பாவிக்கின்றார்கள். அவர்களுடைய உணவுக்காக இந்த வகை ஆமையினங்கள் பிடிக்கப்பட்டு கொல்லப்படுகின்றன.



இதன் மூலம் உள்ளூர் வியாபாரிகள் பயனடைகின்றார்கள். இந்த அரிய வகை ஆமைகளுடைய தலைகள் பெரியவை. அத்துடன், மற்றைய ஆமைகளுடன் ஒப்பிடும்பொழுது அளவிலும் இவை பெரியனவாகவே காணப்படுகின்றன.

கிரேக்க நாட்டில் ஆமைகளைக் கொல்பவர்கள் மற்றும் பிடிப்பவர்களுக்கு நீதிமன்றம் தடைவிதித்திருக்கின்றது.

இரண்டு வருடங்களுக்கு முன்பு ஐரோப்பிய நீதிமன்றம் கண்டிப்பான சட்டம் ஒன்றினை ஆமைகளைப் பாதுகாப்பதற்காக பிறப்பித்திருந்தது.

ஒலிம்பிக் போட்டிகள் கிரேக்கத்தின் ஏதென்ஸ் நகரில் நடைபெறுகின்ற நிலையில் உல்லாசப் பயணிகள் அங்கே அதிகம் கூடுவார்கள். ஆகவே இந்தத் தடையுத்தரவு தேவைதான். ◆

## சனியில் நீரா

சனிக்கிரகத்தில் நீர் இருப்பதற்கான சான்றுகள் தற்போது காணப்படுகின்றன. விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளின்படி, நீர் விழுகின்ற சத்தம் சனிக்கிரகத்தில் கேட்பதாகக் கூறப்படுகின்றது.

சிலவேளைகளில் அங்கே நீர் வீழ்ச்சியும் இருக்கலாம் என நாஸா விஞ்ஞானிகள் கருதுகின்றார்கள்.



ஆனால், நன்கு இவற்றை எல்லாம் கூர்ந்து அவதானித்த ஆய்வாளர்கள் சனிக்கிரகத்தில் திரவ மெதேன் காணப்படுகின்றது எனவும், அதுதான் நீர் போன்ற சத்தங்களை உருவாக்குகின்றது எனவும் கூறுகின்றார்கள்.

கைஜெக்ஸ் என்கின்ற விண்கலம் தன்னுடைய 6 1/2 வருட நீண்ட பயணத்தின் முடிவில், பலவிதமான விண்வெளி ஆராய்ச்சி முடிவுகளைக் கொடுத்திருக்கின்றது. இதேவேளை இது டைட்டன் கிரகத்தில் 2005 ஆம் ஆண்டில் தரையிறங்க இருக்கின்றது.



இதன்மூலம் இது அங்கேயிருக்கின்ற சூழல் நிலைமைகளை ஆராய்ந்து, சில முடிவுகளைக் கொடுக்கும் என விஞ்ஞானிகள் கருதுகின்றார்கள்.

சனிக்கிரகத்தின் சில இடங்களில் மெதேன் திரவம் நீர்வீழ்ச்சி போலவும் பாய்வதாகக் கூறப்படுகின்றது. ஆனால், அங்கே சில இடங்களில் வெப்பநிலை 180 பாகை செல்சியஸ் ஆக இருக்கின்றது எனவும் நாஸா கூறுகின்றது.

நெருடல்கள்...

# யாழ்.பல்கலைக்கழகம் மீது படிந்து வரும் கறைகள்...




யாழ். பல்கலைக்கழகம் தமிழினத்தின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் வகித்த பங்கு வரலாற்றில் எப்போதும் அழியாத தொன்று. அப்போதெல்லாம் சிங்கள பேரினவாதத்தின் அடக்கு முறையை எதிர்த்து பெரும் அகிம்சைப் போராட்டங்கள் நடந்தன. பகிஸ்கரிப்புக்கள், உண்ணாவிரதங்கள் என்பன இராணுவ அட்டூழியத்துக்கு எதிராக போராடிய பல்கலைக்கழக சமூகம் தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்துக்கு முன்மாதிரியாக இருந்தது. அப்போது மாணவர்கள் மட்டுமல்ல கல்விசார் கல்விசாராத ஊழியர்கள் எல்லோரும் ஆளுமையுள்ளவர்களாகவும், விடுதலையின் உணர்வைக் கொண்டவர்களாகவும் விளங்கினார்கள். இன்னும் அத்தகைய ஆளுமையும், பண்பும் கொண்ட மாணவர்களையும், கல்விசார், கல்விசாரா ஊழியர்கள் பலரையும் காண முடிகின்றது. ஆனால், யதார்த்தத்தில் தமிழ் சமூகம் அவமானப்பட வேண்டியதாக மாறிவருகிறது.

பாடான நிர்வாகம் உருவாகும் என்பதில் சந்தேகமில்லை. அதுவே இன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் காணப்படுவது.

யாழ்.பல்கலைக்கழகம் தமிழ் சமூகத்தின் சொத்து. அதைப்பற்றி எந்த தமிழ் மகனும் கேள்வி எழுப்பலாம். இங்கே இருப்பவர்கள் முன் மாதிரியாக இருக்கவேண்டும். அவர்கள் தமிழ் சமூகத்துக்காகவும், தேசியத்துக்காகவும் உழைக்க வேண்டும் மாறாக மோசடி, திருட்டு, ஏமாற்று, போலித்தனம், பாலியல்துஷ்பிரயோகம் போன்ற மிக அருவருக்கத்தக்க செயல்களில் ஈடுபடுவோர்களின் களமாக பல்கலைக்கழகம் இருப்பதை ஏற்க முடியாது. தமது நலன்களுக்கும் - தேவைகளுக்காகவும் தமிழினத்தின் பல்கலைக்கழகத்தை பயன்படுத்துவதை அனுமதிக்கமுடியாது.

மானிடத்தை கற்றுக் கொடுக்க வேண்டியவர்கள் அதனை குழிதோண்டி புதைக்க முடியாது பல ஆயிரக்கணக்கான மனித உடல்

**மாணவனோ, ஊழியனோ, உரிமையைக் கேட்க முன்பு அவர்களது உரிமையை நிர்வாகம் தெரிந்து கொண்டு பணியாற்ற வேண்டும். அதுதான் நிர்வாகிகளின் கடமை. மாணவனோ, ஊழியனோ தட்டிக் கேட்டபின்பு உரிமையை வழங்குவது நிர்வாகிகளுக்கு அழகான தல்ல.**

பகிஸ்கரிப்பு, உண்ணாவிரதம்- ஜனநாயக ரீதியாக போராட்ட சாதனம் என்பதில் எந்தவித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை. ஆனால், அது பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்துக்கு எதிராக பிரயோகிக்கப்படுவதென்பது தான் அவமானத்துக்குரியது. அதுவும் மாணவர்கள் நிர்வாகத்துக்கு எதிராக உண்ணாவிரதமிருக்கிறார்கள். பகிஸ்கரிப்பு செய்கிறார்கள் என்பதுதான். மேலும் அவமானகரமான விடயம். பல்கலைக்கழகம் மாணவனுக்காகவே உருவாக்கப்பட்டது. தற்போது கல்விசார் ஊழியர்களும், நிர்வாகமும், கல்விசாரா ஊழியர்களும் பல வருடங்களுக்கு முன்னர் மாணவர்களாக இருந்தவர்கள்தான். அதுமட்டுமல்ல அவர்கள், மாணவர்களுக்காகவே பல்கலைக்கழக ஊழியர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள்.

பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் நலனே முதன்மையானது. மாணவன் இல்லாதுவிட்டால் நிர்வாகம் இயக்கமற்ற இயந்திரத்துக்கு ஒப்பானது. ஊதியமும் இல்லை. ஊழியமும் இல்லை. மாணவனின் நலனின் நிர்வாகம் சிரத்தை கொள்ளுமாயின் இன்றைய பகிஸ்கரிப்புக்கோ, உண்ணாவிரதப் போராட்டத்துக்கோ வாய்ப்பேற்பட்டிருக்காது. மாணவனோ, ஊழியனோ, உரிமையைக் கேட்க முன்பு அவர்களது உரிமையை நிர்வாகம் தெரிந்து கொண்டு பணியாற்ற வேண்டும். அதுதான் நிர்வாகிகளின் கடமை. மாணவனோ, ஊழியனோ தட்டிக் கேட்டபின்பு உரிமையை வழங்குவது நிர்வாகிகளுக்கு அழகான தல்ல. கௌரவம், சுயநலன் சார்ந்து முடிவுகளை எடுக்கும்போது முரண்

களை காக்க வேண்டிய கரங்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டிய நீங்கள் கறைபடிந்தவர்களாக தமிழ் சமூகத்தில் வாழமுடியாது. தமிழ் மகன் ஒவ்வொருவனும் உங்கள் நோயாளிகள் தான். உண்ணாவிரதமிருந்த மாணவியும் கூட என்பதை பல்கலைக்கழக நிர்வாகம் மறந்துவிட முடியாது. எத்தனையோ உயிர்களை பாதுகாக்கவேண்டிய பல்கலைக்கழக மருத்துவப் பிரிவு தமிழினத்துக்கு ஆற்றவேண்டிய பணிகள் அதிகம் உண்டு. தனிப்பட்ட அபிப்பிராயத்துக்காகவும், நலனுக்காகவும் சமூகத்தின் முழு மனிதத்துவத்தையும் சிதைக்க முடியாது. எஜமானிய மனோநிலையோடு - மருத்துவத்தை பார்க்காது மனிதாபிமான மனநிலையோடு அதனை அணுகுவதே சிறந்தது.

பகிஸ்கரிப்பென்றால் யாழ்.பல்கலைக்கழகம், யாழ்.பல்கலைக்கழகம் என்றால் பகிஸ்கரிப்பு. என்ற அருவருப்பான மதிப்பீட்டுக்கு பல்கலைக்கழகத்தை உட்படுத்தும் செயல் நிறுத்தப்பட வேண்டும். கல்விசாரா ஊழியரின் பகிஸ்கரிப்பு முடிந்து இரண்டு வாரமே பூர்த்தியாகவில்லை. இது மாணவனின் கல்வியை பாதிப்பதோடு நின்றுவிடாது. எதிர்கால தமிழ் சமூகத்தையே அழியோடு அழித்து விடும். ஒரு சமூகத்தை எழுச்சியடையச் செய்வதில் பெரும் பங்கு வகிப்பது புத்தி ஜீவிகளும் பல்கலைக்கழகமும், ஐரோப்பாவை உலகத்துக்கு காட்டியதில் பல்கலைக்கழகங்களுக்கு அதிக பங்குண்டு. இதனையே தமிழ் சமூகமும் யாழ்.பல்கலைக்கழகத்திடம் எதிர்பார்த்து நிற்கின்றது. □□□

- ஐங்கரன்

---

- வல்வையூரான்

# ஒரு சமாதானப் புறாவின் கதை!





"இலங்கையில் முதல் தடவையாக வெண்புறாவின் மரணம் சம்பந்தமாக விசாரணை நடைபெற்றது எப்போது?"

"எங்கே?"

"எந்த இடத்தில்?" என இனி வரும் காலங்களில் எங்கள் பள்ளிப் பிள்ளைகளின் வினாத்தாள்களிலே வினாக்கள் கேட்கப்படுவதற்கு இடம் இருக்கின்றது.

இதைத் தவிர பலவிதமான தொடர் பாடல்களிலும், வினாவிடை நிழ்ச்சிகளிலும் அவை இடம்பெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

"அந்தப் புறாவின் மரண விசாரணை அறிக்கையின் தீர்ப்பு என்ன?" என்னும் அடுத்த வினா கேட்கப் படலாம்.

இவை அனைத்திற்குமான விடையை நான் சொல்லப்போகும் அந்தக் கதையின் மூலம் நீங்கள் தெரிந்து கொள்ள முடியும்.

அந்தப் புறாவின் கதை இது!
வெண்புறாவின் கதை இது!
சமாதானப் புறாவின் கதை இது!

இந்த அரசாங்கத்தின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமசிங்கநாயக்க இராணுவ விழாவின் போது பறக்கவிட்டு, அதே இடத்திலேயே இறந்து விழுந்த அந்த வெண்புறாவின் கதை இது! ஐக்கிய நாடுகளின அமைதிப்படை வீர்களின் பயிற்சியின் பொருட்டு களுத்துறை குக்குளுகங்கைப் பிரதேசத்தில் படைமுகாம தொகுதி ஒன்றினை ஆரம்பிப்பதன் பொருட்டு கடந்த மாதம் 12 ஆம் திகதி விழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த விழாவில் சிறப்பு விருநதினராகப் பங்கேற்றிருந்தவர் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான ரத்னசிறி விக்கிரமநாயக்க ஆவார். அங்கு இராணுவத் தளபதி உட்பட அரசியல்வாதிகளும் சமாதானத்தின் அடை[illegible]மாக எட்டு வெண்புறாக்களை வானத்திலே பறக்க விட்டார்கள்.

பாதுகாப்பு உத்தி யோகத்தர்களது இரு கரங்களினின்றும் மீ[illegible]ட வெண்புறாக்கள் சுதந்திரமாக தத்தம் இறக்கைகளை அசைத்து ஆகாயத்திலே பறந்து சென்ற அதே வேளை, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் மேலே வீசிய அந்த வெண்புறா அந்தக் கணத்திலேயே நிலத்தில்

**அரசியல்வாதி களால் பறக்க விடப் பட்ட புறாக்கள் சில பறக்கவிடப் பட்ட அந்தக் கணமே ஒலிம்பிக் தீபத்தில் விழுந்து இறந்து போயுள்ளமை பற்றியும் கேள்விப்பட்டிருக்கின் றோம். கடந்த வருடம் கொழும்பு சுகததாச விளை யாட்டரங்கில் நடை பெற்ற ஆசிய விளையாட்டு விழா வின் போது முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐந்து புறாக் களைப் பறக்க விட்டபோது அதில் சிலவே ஒலிம்பிக் தீபத்தில் இறந்து விழுந்து எரிந்து போயின.**

குறியீடாக பிரதி அமைச்சரினால் பறக்க விடப்பட்ட அந்த வெண்புறாவின் உயிர்தான் பறந்து போயிற்று என்ற உண்மை இறுதியில் வெளியாகிய அந்தக் கணமே பிரதி பாதுகாப்பு அமைசசரின் முகம் இருளடைந்து போனது என்பதனை இராணுவ உத்தியோகததர்களிடம் இருந்து பின்னர் அறிந்து கொள்ள முடிந்தது.

இந்தப் பிரச்சினையானது இரா

இந்தப் பிரச்சினையானது இராணுவ அதிகாரிகள் மத்தியில் பெரும் சிக்கலை ஏற்படுத்தி விட்டது. அந்த வெண்புறாவின் மரணம் அந்த இடத்தோடு நின்றுவிடவில்லை. பிரதிப்பாதுகாப்பு அமைச்சரிடம் கொடுக்கப்பட்ட அந்தப் புறா இறந்து போனமை குழப்பத்தினை ஏற்படுத்தும் செயலா என்பதனை ஆராய்ந்து பார்ப்பதன் பொருட்டு இராணுவ தளபதி இராணுவப் பொலிஸாரைச் சேர்ந்த பிரிகேடியர் சுனில் தர்மரத்னவின் தலைமையில குழுவொன்றை அமைத்தார். விசாரணையின் முடிவில் அந்தப்புறா 40, 50 நிமிடங்கள் ஒவ்வொரு இராணுவ வீரர்களின் கரங்களிலும் சிக்குண்டிருந்த காரணத்தாலேயே இறந்துபோனது என பது கண்டு பிடிக்கப்பட்டது.

இராணுவத்தினர் 'ஜாஎல' பிரதேசத்திலிருந்து ஒன்று 200/= ரூபா வீதம் 8 புறாக்களை வாங்கியிருந்தது. பின்னர் அந்தப் புறாக்கள் எட்டும் இராணுவ தலைமையகத்தில் கூடுகளில் அடைத்து வைக்கப்பட்டு குக்குறே கங்கை முகாமிற்கு அனுப்பப்பட்டிருந்தது, 12 ஆம் திகதியே. இராணுவ முகாம் விழாவின் போது புறாக்களை விடுதலை செய்யும் ஒழுங்குவிதிகள் உள்ளனவா? என இராணுவ ஊடகப் பேச்சாளர் கேணல் சுமேட பெரேராவிடம் வினாவப்பட்டது.

"இல்லை அப்படி நீதி இல்லை. ஐக்கிய நாடுகளின் அமைதிப் படையின் செயற்பாடுகளின் குறியீடாகவே தான் அன்று புறாக்களை விடுவித்தோம்" என்று அவர் பதிலளித்தார்.



அவர் சொல்கின்ற விதமாக இராணுவ படை விழாக்களின் போது புறாக்களை பறக்கவிடும் வழக்கம் இராணுவத்தில் இல்லை என்பது தெளிவாகின்றது.

அரச விழாக்களை அமைக்கும் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த அமைப்பு ஏற்பாடு செய்யும் முக்கியமான விழாக்களில் சுதந்திரக் கொண்டாட்டமும் ஒன்றாகும். சில அரச தலைவர்களும் சுதந்திர விழாக்களில் புறாக்களை சுதந்திரமாகப் பறக்க விடுவதை நாங்கள் பாத்திருக்கின்றோம்.

ஆனால், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சும் அரச விழாக்களில்

கள் அமைச்சும் அரச விழாக்களில் தங்கள் அமைச்சு புறாக்களைப் பறக்க விடுவதில்லை என கூறுகின்றது. அது மாத்திரமன்றி அப்படி ஒரு வழமையற்றி தங்கள் சுற்றறிக்கைகளிலும் தெளிவு படுத்துகின்றது.

"நாங்கள் அரச விழாக்களை அமைத்து நடாத்துவது அதன் பொருட்டு. வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கைகளுக்கு அமையவே, அந்தச் சுற்றறிக்கைகளில் எந்த இடத்திலும் புறாக்களைப் பறக்க விட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருக்கவில்லை" என மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் சொல்கின்ற விதமாகப் பார்க்கும் பொழுது சமாதானத்தின் பொருட்டு புறாக்களைப் பறக்க விட வேண்டுமென ஆலோசனை வழங்குவது அரசியல்வாதிகளே என்பது புலனாகின்றது.

எப்படியாயினும் இதற்கு முன்பும் அரசியல்வாதிகளால் பறக்க விடப்பட்ட புறாக்கள் சில பறக்கவிடப்பட்ட அந்தக் கணமே ஒலிம்பிக் தீபத்தில் விழுந்து இறந்து போயுள்ளமை பற்றியும் கேள்விப் பட்டிருக்கின்றோம். கடந்த வருடம் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு விழாவின் போது முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐந்து புறாக்களைப் பறக்க விட்டபோது அதில் சிலவே ஒலிம்பிக் தீபத்தில் இறந்து விழுந்து எரிந்து போயின.

இது நடைபெற்று சில மாதங்களின் பின்பு நடைபெற்ற நிகழ்வொன்றின் போது மாகாணசபை உறுப்பினர் ஒருவர் முன்னாள் பிரதமரிடம் சதந்திரமாகப் பறக்க விடுமாறு புறாவைக் கொடுத்தபோது அவர் அதனை தன் கரங்களில் பெற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்.

சமாதானத்தின் பொருட்டு புறாக்களைப் பறக்க விடுவது எங்கள் நாட்டில் பிரபல்யமாவதற்கு காரணகர்த்தாவாக விளங்கியவர் முன்னாள் ஜனாதிபதி மறைந்த ஆர். பிரேமதாசவே. அவரின் பிறந்த நாளின் பொருட்டு நடைபெற்ற கிராம எழுச்சி (கம் உதாவ) கலை விழாவின் போது புறாக்கள் உட்பட ஆயிரக்கணக்கான பறவைகளும் அப்போது சுதந்திரமாக பறக்க விடப்பட்டன.

தற்போது சமாதானத்தின் குறியீடாக புறாக்கள் பயன்படுத்தப்பட்டாலும் கடந்த காலங்களில் என்றால அவைகள் அதிகமாகத் தேவைப்பட்டது. யுத்த நடவடிக்கைகளுக்காகவே, அரசர்களின் காலத்தின் போதும், முதலாவது மகாயுத்த காலத்திலும் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கு பெரும்பான்மையாக பிரபல ஊடகமாக விளங்கியவை புறாக்களே. தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட புறாக்கள் முதலாவது மகா யுத்தத்தின் பின்பு சமாதானத்தின் குறியீடாக ஐரோப்பாவில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக கூறப்படுகின்றது.

எப்படியாயினும் சமாதானத்தின் குறியீடாக தற்பொழுது. கருதப்படும் வெண்புறா, குக்குளே கங்கையில் மடிந்து விழுந்ததைப் போன்று சமாதான முயற்சிகளும் குற்றுயிரும் குறையுயிருமாகப் போய்விடுமோ என்ற ஏக்கம், தென்னிலங்கயைின் தற்போதைய நிலைகளை சற்று நோக்குகின்ற என் போன்றவர்களின் உள்ளங்களில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. □

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*தேறற்க யாரையும் தேராது தேர்ந்த பின்*
*தேறுக தேறும் பொருள்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## தேர்தல் கூறும் செய்தியும், சமாதானம் குறித்த சந்தேகமும்!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் ஆட்சிக்குவந்து மூன்று மாதங்கள் கடந்துள்ள வேளையில், நாடாளுமன்றத்தில் தன் அறுதிப்பெரும்பான்மையை நிரூபித்து நாடாளுமன்றக் கூட்டத்தொடரை ஒழுங்காக, அமைதியாக நடத்தும் ஆளுமையை இன்னமும் உறுதிப்படுத்திக்கொள்ள முடியாத சூழலில் மற்றொரு தேர்தலுக்கு முகங்கொடுத்து தனக்கான மக்கள் ஆதரவுப் பலத்தை மதிப்பீடுசெய்ய முயன்றதில், தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் கிடைத்த வெற்றிகள் அவர்களுக்கு திருப்தியை அல்லது மகிழ்ச்சியை ஏற்படுத்தினாலும்கூட, உண்மையில் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மீதும் அரசின் அரசியல் நகர்வுகள் மீதும் மக்களின் நம்பிக்கை தளர்ந்து கொண்டுவருவதையே அது உணர்த்துவதாகவும் உள்ளது.

விழுந்த வாக்குகளின் அடிப்படையில் அரசுக்கு வெற்றி கிடைத்திருந்தாலும், விழாத வாக்குகளின் விகிதாசார அடிப்படையில் இந்த அரசாங்கத்துக்கு மட்டுமல்ல, இலங்கையின் பேரினவாத ஜனநாயகத்துக்கும் பெரும் தோல்வியே ஏற்பட்டுள்ளது. இலங்கையின் இரு பெரும் ஆதிக்க அரசியல் கட்சிகளையும் அவர்களின் கூட்டணியினரையும் தென்பகுதி மக்கள் வெறுக்கிறார்கள். எனவே, அவற்றை நிராகரித்து, புறமொதுக்கி தமது வாக்குகளை அவர்களுக்கு அளிக்காது பகிஷ்கரித்துள்ளார்கள்.

இதுவே மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் உணர்த்தும் தெளிவான செய்தியாகும்.

சுதந்திரமடைந்த காலம்முதல் மாற மாறி ஆட்சிக்குவந்த இரு பெரும் பேரினவாத கட்சிகளாலும் காலத்துக்குக் காலம் அவர்களோடு கூட்டுச்சேர்ந்து பதவிப் பதர்களாக தங்களை வெளிப்படையாகவே இனங்காட்டிக்கொண்ட இடதுசாரி மற்றும் மதவாதக் கட்சியினராலும் எவ்வாறெல்லாம் இந்த நாட்டின் சிறுபான்மை சமூகத்தவர்கள், குறிப்பாகத் தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் பறக்கப்பட்டு, அவர்கள் அடக்குமுறைக்கு உள்ளாகி கொடுமைப்படுத்தப்பட்டார்கள் என்பதை இரத்த வரிகளாலேயே பெரும்பாலும் எழுதப்பட்ட இலங்கையின் சமகால வரலாறு ஏதோவொரு வகையில் பதிவுசெய்தே வைத்துள்ளது.

அதுமட்டுமல்ல, மிக அண்மைக்கால இருபெரும் அரசியல் கட்சிகளின் சந்தர்ப்பவாத அரசியல் நகர்வுகளாலும், சுயநலத்துடன் கூடிய ஆட்சி முன்னெடுப்புக்களாலும் இலங்கையின் பொருளாதாரம், சமூக அறிவியல் வளர்ச்சி, தேசிய ஒருமைப்பாட்டு உணர்வு, இறமை மீதான பாதுகாப்பு என அனைத்து பல்கோண அம்சங்களும் வீழ்ச்சிக்கும், அச்சுறுத்தல்களுக்கும் உள்ளான நிலையில், தேசத்தினதும், தேசத்தின் பெரும்பான்மை மக்களினதும் (சிறுபான்மை மக்களை அரசுகள் புறந்தள்ளி வெகு காலமாகிவிட்டது தெரிந்ததே....) எதிர்காலத்தை கேள்விக்குள்ளாக்கியுள்ளமையை, தென்பகுதி பெரும்பான்மை சமூகத்தவர்களின் தேசிய - மற்றும் சமூகப் பொறுப்புள்ளவர்கள் மிகவும் பொறுப்புணர்வுடன் தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கியதன் தெளிவான பிரதிபலிப்பாகவே இந்தத் தேர்தலில் அவர்கள் வாக்களிகாது புறக்கணித்ததைக் கருதமுடியும்.

கடந்த மூன்றுமாத கால புதிய அரசின் ஆட்சியின்போதான அரசாங்க மற்றும் பெரும்பான்மையின எதிர்க்கட்சியினரின் அரசியல் குத்துக்கரணங்கள், வாக்குறுதி மறப்புகள், கொள்கைப் பிறழ்வுகள், உள்ளக மோதல்கள், சமாதானம் குறித்த அவர்களின் நிலைப்பாட்டுறுதி இன்மைகள் என அனைத்தும் அரசியல் அயோக்கியத்தனங்களின் அதியுச்சநிலையை மக்களுக்கு உணர்த்தி நின்றன...

தர்மராஜ்ஜியம் அமைக்க மதபீடத்திலிருந்து அரசியல் பீடத்துக்கு வாக்கு யாசகம் கேட்டு நுழைந்த பௌத்த பிக்குகளின் மதவாத முகத்தையும், இனவாதக் குரலையும் இந்த மூன்று மாதங்களிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி, மிகத் தெளிவாக சர்வதேச சமூகத்துக்கு உணர்த்தவே செய்ததுடன் பௌத்த துறவிகள் மீது சிங்கள அரசியல்வாதிகள் எத்தகைய கேவலமான மதிப்பை வைத்திருக்கிறார்கள் என்பதை, அந்தத் துறவிகளை அவமானத்துடன் உணரவும் வைத்தது.

இவை யாவும் இலங்கையின் அரசியல் பாரம்பரியம் வளர்த்துவிட்டுள்ள ஜனநாயக அநாகரிகங்களாகும்.

சமாதானம் பற்றிப் பேசிக்கொண்டு, அதுகுறித்து சர்வதேசத்தையும், நாட்டு மக்களையும் நம்பவைத்துக்கொண்டு, போருக்கான தீவிர நகர்வுகளையும் மேற்கொள்ளும் மூலோபாயத்தை அரசு தொடரும் சாத்தியக்கூறுகளே இன்றைய அரசியல் யதார்த்தமாகவுள்ளது.

நேற்றைய தினம், தேர்தல் முடிந்த சூட்டுடன் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க - படைத்தளபதிகள் மற்றும் முக்கியஸ்தர்கள் சகிதம் யாழ். குடாநாட்டுக்கு தான் பதவியேற்ற பின் முதற்தடவையாக விஜயம்செய்து இராணுவ முகாம்கள், படைத்தளங்கள், உயர்பாதுகாப்பு வலயங்கள் குறித்து மதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளார். இவை பாதுகாப்பு நிலவரங்களை ஆராய்தல் என்ற பெயரில் - ஒரு வழமையான நடவடிக்கையென்று வெளிப்படையாகக் கூறப்பட்டாலும், அதன் உள்நோக்கம் வேறாகவும் இருக்கலாம்.

தேர்தல் வெற்றியை மீண்டும் போருக்கு சிங்கள மக்கள் கொடுத்த அங்கீகாரமாகக் கருதி, மேற்கொள்ளும் முதல் நடவடிக்கையாகவும்கூட இருக்கலாம்.

கருணா விவகாரத்தில் அரசின் நடவடிக்கைகள் யாவும் சமாதானத்துக்கு துரோகம் இழைக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதை அரசின் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், கருணாவும் பி.பி.சி. நேர்காணல் மூலம் வெட்டவெளிச்சமாக்கியுள்ள நிலையில், கருணா விவகாரத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதாக அரசு கூறினாலும் அதனை எவரும் நம்புவது கடினமே.

இந்த நிலையில் அரசின் சமாதான அழைப்பை, தமிழர் தரப்பு எச்சரிக்கையுடனும், நிதானத்துடனும்தான் அனுக முடியும் என்பதை சர்வதேச சமாதான ஏற்பாட்டாளர்கள் புரிந்து கொள்வது மிகமிக அவசியமாகும்.

## நாடும் நடப்பும்




# ஓசோன் தினத்தை முன்னிட்டு சுவரொட்டிப் போட்டிக்கு ஏற்பாடு

வருடந்தோறும் செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டு வரும் ஓசோன் தினத்தை முன்னிட்டு சுவரொட்டிப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்கள் மற்றும் திறந்த போட்டிகளென இரு பிரிவுகளாக நடாத்தப்படவுள்ள போட்டிகளுக்கான விண்ணப்பங்களை இலங்கை விஞ்ஞான முன்னேற்றச்சங்கம் கோரியுள்ளது. இந்தப் போட்டிகள் மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் இடம்பெறவுள்ளன.

குறிப்பிட்ட போட்டிக்காக வரையப்படும் சுவரொட்டிகள் ஓசோன் படையை அழிக்கும் காரணிகளைத் தொனிப்பொருளாகக்கொண்டு வரையப்படவேண்டும்.

சுவரொட்டிகள் 60X40 செ.மீ. அளவிலான தாள்களில் வரையப்படவேண்டும்.

இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் தம்மால் வரையப்பட்ட சுவரொட்டிகளை - 'செயலாளர் சுற்றாடற்குழு, இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம், 120/10 விஜய மாவத்தை, கொழும்பு - 06' என்ற முகவரிக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

திறந்த போட்டிகளில் - முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுவோருக்கு 15 ஆயிரம் ரூபா, 12 500 ரூபா, 10 ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் பரிசாக வழங்கப்படும்.

பாடசாலை மாணவர்களிடையே போட்டிகளுக்கு முதலாம் இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு - முறையே 7 ஆயிரம், 5 ஆயிரம், 3 ஆயிரம் ரூபா ரொக்கப்பணமாக வழங்கப்படும்.

## சமூக வலுவூட்டாளர்கள் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

நியாப் திட்டத்தின்கீழ் பணியாற்றுவதற்காக சமூகவலுவூட்டாளர்கள் பதவிக்கு வடக்கு - கிழக்கைச் சேர்ந்த பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவதற்காகவே இந்தப் பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

மாதிரிக் கிராமங்களில் செயற்படுமுகமாக இந்தப் பதவிக்கு ஆட்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் சமூகவிஞ்ஞானம், விஞ்ஞானம், முகாமைத்துவம், வணிகம் மற்றும் துறைகளில் பட்டம் பெற்றிருப்பதுடன் - சமூகவலுவூட்டல் பணியில் ஏதேனுமோர் அரச சார்பற்ற நிறுவனத்தில் குறைந்தது மூன்று வருடங்கள் பணியாற்றிய அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பதவிக்கு விண்ணப்பிப்போரின் வயதெல்லை 21 முதல் 45 வரை என வரையறுக்கப்பட்டிருப்பதாகவும், விண்ணப்பங்களை அனுப்புவோர் தாம் பணிபுரிய விரும்பும் மாவட்டம் மற்றும் சுயவிபரங்களை உள்ளடக்கிய விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்து - 'திட்டப்பணிப்பாளர், முகாமைத்துவப் பிரிவு இல 171, மின்சாரநிலைய வீதி, திருகோணமலை' எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ப)

## இடைவிலகிய மாணவர்களுக்கான எழுத்தறிவூட்டல் பயிற்சி வகுப்பு

யாழ். வலயக்கல்விப் பணிமனையில் முறைசாராக் கல்விப் பிரிவினரால் பாடசாலை செல்லாத மாணவர்களுக்கான எழுத்தறிவூட்டல் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

சிறுப்பிட்டி கலைமதி சனசமூக நிலையத்தில் இடம்பெற்று வரும் இந்தப் பயிற்சி வகுப்புக்களில் - 52 மாணவர்கள் கலந்துகொண்டு பயிற்சிகளைப் பெற்றுவருகின்றனர்.

இவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டதன் பின்னர் இவர்கள் பாடசாலைகளில் உரிய வகுப்புக்களில் சேர்க்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் எழுதுகருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. இதேவேளை, இந்தச் செயற்றிட்டத்தின் இரண்டாவது கட்டமாக உரும்பிராய் மேற்குப் பகுதியிலுள்ள செல்வபுரம், யோகபுரம் ஆகிய கிராமங்கள் தெரிந்தெடுக்கப்பட்டன.

இந்தக் கிராமங்களைச் சேர்ந்த பாடசாலைகளுக்குச் செல்லாத 36 மாணவர்களுக்கு எழுத்தறிவு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

## மாகாணசபைத் தேர்தலில் வாக்காளர்கள் ஆர்வமில்லை

### பவ்ரல் அமைப்புத் தகவல்

மாகாணசபைத் தேர்தல்களில் வாக்காளர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்ளவில்லை என்று பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி றொட்றிகோ தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

தேர்தலில் வாக்காளர்கள் தங்கள் வாக்குகளை அளிக்க விரும்பாமைக்கான காரணத்தை சம்மந்தப்பட்ட தரப்பினை உணந்துகொள்ளவேண்டும்.

வாக்காளர்கள் மத்தியில் மாகாணசபை தொடர்பான குழப்பமே வாக்களிப்பு வீதம் குறைந்ததற்குக் காரணமாகும். அத்தோடு மூன்று மாத இடைவெளியில் இரண்டாவது தேர்தல் நடைபெற்றுள்ளதால் மக்களின் ஆர்வம் குறைந்துள்ளது.

கடந்த பொதுத்தேர்தல்களில் 76 வீதமான மக்கள் வாக்களித்திருக்கிறார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புலிகளுக்கு டீசல் கடத்தியவர் தமிழக பொலிஸாரால் கைதாம்!

இராமேஸ்வரத்திலிருந்து விடுதலைப் புலிகளுக்கு டீசல், மருந்துப்பொருட்கள், செல்போன்கள் ஆகியவற்றைக் கடத்திய நபர்களில் ஒருவரைத் தமிழகப் பொலிஸார் கைதுசெய்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

சம்பவதினத்தன்று இராமேஸ்வரம் நகர பொலிஸ் நிலைய அதிகாரியும், சில பொலிஸாரும் கடற்கரையில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, அங்கு இருளில் மறைந்திருந்த மர்ம நபர்கள் இருவரும் யாரிடமோ செல்போனில் பேசிக் கொண்டிருந்தனர். இருவரையும் பொலிஸார் கைதுசெய்ய முற்பட்டபோது ஒருவர் தப்பியோடிவிட்டார். மற்றவர் பிடிபட்டார்.

இவர்கள் விடுதலைப் புலிகளுக்கு - டீசல், கடத்திவிட்டு அது சென்றுசேர்ந்ததா என்ற விபரத்தை செல்போனின் மூலமாக கேட்டுக்கொண்டிருந்ததாக விசாரணைகளின்போது தெரிய வந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## கல்வித் துறையினரின் முறைப்பாடுகளை விசாரிக்க ஒழுக்காற்றுப் பிரிவு அமைப்பு

(கொழும்பு)

அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் தொடர்பான சுமார் 300 விசாரணைகள், கடந்த மே மாதம்வரை பூர்த்தி செய்யப்படவில்லை.

இந்த முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக கல்வி அமைச்சு அதன் மேலதிக செயலரின் கீழ் விசேட புலனாய்வு ஒழுக்காற்றுப் பிரிவு ஒன்றைத் ஸ்தாபித்துள்ளது. அமைச்சின் கீழ் கடமையாற்றும் அனைத்து கல்வித்துறை சார்ந்தோருக்குமான முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காகவே இந்தப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நிதி மற்றும் ஒழுக்காற்று சம்பந்தமான விசாரணைகள் ஒழுங்கு முறைக்கு அமைய நடத்தப்படவில்லை. இதனால் பிரச்சினைக்குரிய அநேக விடயங்கள் கைவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய விசாரணை வினைத்திறன் மிக்கதாக அமையும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(122)

சர்வதேச புலனாய்வு அரசியல்

-வன்கூவரிலிருந்து ரிஷி

# கே.ஜி.பி: மீண்டும் அமெரிக்காவுக்கு தலைவலி

(நேற்றைய தொடர்ச்சி)

இராணுவ நகர்வுக்காக அழைக்கப்பட்ட 10 ஆயிரம் இராணுவ துணைப்படையினர் - அனைவரும் சைபீரியன் இராணுவப்பிரிவில் இருந்து அழைத்திருந்தபோதிலும், அவர்களை பயிற்சிக்காக மூன்று

ஏவுகணைப் பாதுகாப்பு தொழில்நுட்பம்



வேறு வேறு இடங்களுக்கு அனுப்பினார்கள். இதில் இரண்டு இடங்கள் வெஸ்கா உர்றா இராணுவப் பிரிவிலும், மற்றையது மொஸ்கோ இராணுவப் பிரிவிலும் உள்ளன. இப்படி பிரித்து அனுப்பியதில் விசேடம் என்னவென்றால், இதுபற்றி ஐரோப்பிய ஒன்றியத்ததிற்கு அறிவிக்கத்தேவையில்லை. ஐரோப்பிய ஒன்றியத்தின் இராணுவச் சட்டத்தின்படி ஒரு குறிப்பிட்ட இராணுவப் பிரதேசத்தில், ஒரு குறிப்பிட்ட படையணியின் இராணுவப் பயிற்சி நடைபெற்றால், அது பயிற்சியாக இருந்தாலும் ஒன்பதாயிரத்துக்கு மேற்பட்ட இராணுவத்தினர் பங்குகொண்டால் - அது குறித்து ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

அத்துடன் அந்த இராணுவ நிகழ்வைப் பார்வையிட வரும்படி ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுக்கு அழைப்பும் அனுப்பப்படுதல் வேண்டும்.

ரஷ்யா தனது ஒப்பிரேசன் செக்கியூரிட்டி 2004 இற்கு வெளி நாட்டுப் பிரதி நிதிகள் வருகை தருவதை விரும்பவில்லை.

எனவே, சைபீரியன் இராணுவப் பிரதேசத்திலிருந்து அழைக்கப்பட்ட 10 ஆயிரம் பேரை மூன்றாகப் பிரித்து, அதில் இருபிரிவுகளில் 6 ஆயிரம் பேரை இரண்டு இராணுவப்பிரதேசத்திற்கும், 4 ஆயிரம் பேரை ஒரு இராணுவப் பிரதேசத்திற்குமாகப் பிரித்து அனுபபி, தமது நடவடிக்கையை வெற்றிகரமாகச் செய்து முடித்துள்ளார்கள்.

அப்படியிருந்தும் மொஸ்கோ இராணுவப்பிரதேசத்தில், ஏற்கனவே இருந்த இராணுவ வீரர்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்காக இருந்தமையால் முதல்கட்ட இராணுவ நடவடிக்கை தொடக்குவதற்கு முன்னரே சுமார் 6 ஆயிரம் இராணுவ வீரர்களை வடமேற்கே லெனின்கிராட் இராணுவப்பிரதேசத்திற்கு அவசர அவசரமாக அனுப்பிவைத்தார்கள்.

மொஸ்கோ MDக்கும், லெனின்கிராட் MDக்கும் இடையே இருந்த அறைப்பிரதேசத்தில் ரஷ்ய இராணுவம் மிகவும் கவனம் செலுத்திய ஓர் விடயம் மிகவும் ஆச்சரியத்தை ஏற்படுத்தக் கூடியது. வழமையான இராணுவ நகர்வுகளைத் தரையில் பாரிய இராணுவ நகர்வுகள் மூலமே ரஷ்யா கடந்த காலங்களில் மேற்கொண்டது. ஆனால், ஒப்பரேசன் செக்கியூரிட்டி 2004 இல் ஒரு சிறிய மாற்றம்.

மொஸ்கோ MDக்கும், லெனின்கிராட் MDக்கும் இடைப்பட்ட தரைப்பகுதியில் இராணுவ நகர்வு விடயத்தில் இவர்கள் கவனம் செலுத்தி, பயிற்சி எடுப்பது தரைப் பாதை ஊடாக அல்ல - ரயில்வே பாதையூடாகவே.

சுமார் ஒருவார காலத்தினுள் இந்தப்பிரதேச ரயில் பாதை முழுவதையும் இராணுவம் தனது கட்டுபபாட்டின் கீழ் கொண்டுவந்தது. இந்த அசாதாரணப் பயிற்சிக்கான காரணத்தை உடனடியாக ஊகிப்பது கஷ்டமென்றாலும், ஒரு விடயத்தை ஊகிக்கலாம். மொஸ்கோவுக்கு வட மேற்கில் ரயில்வே பாதைகளினூடாக வழமைக்கு மாறான Non contingent military traning வருங்காலத்தில் ரஷ்யா எதிர்பாக்கிறது.

தரையில் ஒப்ரேசன் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் கடலில் ரஷ்யக் கடற்படையும் பயிற்சிகளை மேற்கொண்டது. அதில் கலந்து கொண்டவை - 10 சைபிரஸ் கப்பல்களும், 7 நீர்மூழ்கிக் கப்பல்களும். ரஷ்யாவின் மிகப்பெரிய போர்க்கப்பலான வேல்ட் வெல்ஸ்கிலிருந்து எஸ்.எல்.சி. என. எனப்படும் Sea longs செலுத்தப்பட்டு, பரிசோதித்துப் பார்க்கப்பட்டதாகத் தெரிகிறது. அத்துடன் இரண்டு Inter medium range power technical லும் செலுததப்பட்டதாக ஒரு Report இருக்கிறது. வேறு ஒரு Report அந்த இரண்டும் Balas tic missiles அல்ல. வெறும Simi lato rs of balas tic missiles எனக் கூறுகிறது. ரஷ்ய தரப்பு இதனை ஆமோதிக்கவுமில்லை, மறுக்கவும் இல்லை.



எஸ் - 300 ஏவுகணை

ஆனால் கிடைக்கப்பட்ட சில செய மதிப் புகைப்படங்களிலிருந்து இந்த மூன்று ஏவுகணை சம்பவங்களின் போதும் செய்மதியூடாக ஏவுகணைகள் பாதுகாப்புத்திட்டம் புதிதாக பரிசோதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. அது அனேகமாக ரஷ்யா சமீப காலமாகத் தயாரிப்பில் முழு மூச்சாக ஈடுபட்டுவரும் Missile defence system - S - 300 என்பதாக இருக்கலாம்.

எஸ் - 300 அணிவகுப்பு



ரஷ்ய விமானப்படையின் முதல் கட்ட பயிற்சியின் போது 14 Hevy Bomber விமானங்கள் மூன்று திசைகளில் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன. முதலாவது Set விமானங்கள் வட அத்திலாந்திக் கடலின் மேலாகவும், அடுத்த Set விமானங்கள் ரஷ்யாவுக்கு வடக்கே வலன்ஸ் கடற்பரப்பிலும், மற்றோர் அணி தெற்கே அசிலுர்வஸ்ரே பகுதியிலும் பறந்து, குண்டு வீசிப் பயிற்சி செய்தமை Long Range Radar இல் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதில் இரண்டாவது அணி பயன்படுத்திய ஏவுகணைகளைத் தான் அமெரிக்கா முக்கியமாக கவனித்திருக்கும். ஏ.எல்.சி.என். எனப்படும் Cruise missile கடந்த காலத்தில் ரஷ்யாவும் அமெரிக்காவும் அணுவாயுதக் கட்டுப்பாடு சம்பந்தமான ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு முன்பாக ரஷ்யா ஏவுவதற்குத் தயாராக வைத்திருந்தது. இவ்வகை ஏ.எல்.சி.எனகள் தான்.

இம்முறை வட அட்லாண்டிக் சமுத்திரத்தின் மேலாகப் பறந்த விமானங்களிலிருந்து ஏ.எல்.சி. என்கள் ஏவப்படவில்லை. ஆனால், வலன்ஸ் கடற்பகுதியில (பறந்த மூன்று டி.யு 9 MS) விமானங்கள் 7 ஏ.எல்.சி.என்களை ஏவியதாக தகவல் சொல்லப்படுகிறது. ஒப்ரேசன் செக்கியூரிட்டி - 2004 இன் மிகவும் முக்கியமான நிகழ்ச்சி ஒன்று அவர்கள் திட்டமிட்டதுக்கு தலைகீழாக முடிவடைந்தது.

அதுவும் ரஷ்ய அதிபர் அந்த நிகழ்ச்சியை நேரில் பார்க்கச் சென்றிருந்த தருணத்தில்,

அதில் நடைபெற்ற குழறுபடிகளுக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. அவற்றை நாம் விளக்கமாக செய்வதை ரஷ்ய அதிபர் விரும்பமாட்டார் என்பது உண்மைதான், நாங்கள் சொன்னால் ரஷ்ய அதிபர் கோபிக்கமாட்டார் என்பதும் உண்மைதான்.

(தொடரும்)

வன்னிச் செலவு - 2

கனடாவிலிருந்து நக்கீரன்

# தமிழ்த் தேசிய வாதிகளின் யாத்திரைத் தலமாகும் வன்னி

நண்ட காலமாக யார் என்னைக் கண்டாலும் 'வன்னிக்குப் போகவில்லையா? நீங்கள் கட்டாயம் போகவேண்டும்' என்று கேட்டபடி இருந்தார்கள்.

எனக்கென்ன வன்னி போக வுருப்பம் இல்லையா என்ன? சண்டைக் காலத்தில் போகாமல் இருநததற்கு காரணம் இருந்தது. பயணத்தில் உள்ள ஆபத்துக்கள் தான் அந்தக் காரணம். ஆனால், இப்போது சண்டை ஓய்ந்து அமைதி நிலவுகிற காலமாச்சே? நிச்சயம் போகத்தான் வேண்டும்.

இந்துக்களுக்கு காசி இராமேஸ்வரம் போல், கிறிஸ்தவர்களுக்கு உரோமாபுரிபோல், இஸ்லாமியர்களுக்கு மெக்காபோல் தமிழ்த் தேசியத்தை நேசிப்பவர்களுக்கு- வன்னி யாத்திரைத் தலமாக விளங்குகிறது.

ஆனால், நீண்ட தூரம் பயணம் செய்யும் நிலையில் நான் இல்லை. சென்ற ஆண்டு முற்பகுதியில் எந்த முன்னறிவித்தலும் இன்றிக் காலில் வாதம் வந்து சேர்ந்தது. ஒரு நாள் காலை எழுந்த போது வலது கால் பெருவிரலில் சாடையான நோ இருந்தது. விரல் சுழுக்கி இருக்கலாம் என நினைத்தேன். இரவு பெரு விரல் வீங்கி வலிக்கத் தொடங்கயது. நித்திரைகூடக் கொள்ள முடியவில்லை.

குடும்ப வைத்தியரிடம் போன போது எக்ஸ்-றே எடுக்க அனுப்பினார். எக்ஸ்-றே எடுத்தவர் ஒரு தமிழர். என்னை அவருக்குத் தெரிந்திருந்தது. பிலிமைக் கழுவி அப்போதே முடிவைச் சொன்னார். கால் விரலில் முறிவு ஒன்றும் இல்லை. பயப்படத் தேவையில்லை என்றார்.

அப்பாடா தலைக்கு வந்த ஆபத்து தலைப்பாவோடு போய் விட்டதென்று நினைத்து நிம்மதிப் பெருமூச்சு விட்டேன். ஆனால், அந்த நிம்மதி நீடிக்கவில்லை. கால் வீக்கமும், கொதியும் குறையவில்லை. கூடிக்கொண்டேபோனது. அடுத்து மருத்துவர் சிறுநீர் பரிசோதனைக்கு அனுப்பினார்.

எனது மகன் காலைப் பார்த்து விட்டு 'அப்பா இது Gout என்றான். அவன் சொன்ன அந்த ஆங்கிலச் சொல் நான் முன்பின் கேள்விப்படாத ஒன்று. இன்றைய தலைமுறையினருக்குப் பொது அறிவு அதிகமாக இருக்கிறது. இன்றைய கல்விமுறை, சூழல், தகவல் தொழில்நுட்பம் அதற்குக் காரணமாகும்.

மருத்துவரிடம் சென்றபோது கால் வீக்கத்துக்கு காரணம் கீல் வாதம் (Gout) என்பதை அவர் உறுதிப்படுத்தினார். சிறுநீரிலுள்ள யூறிக் அமிலம் முற்றிலும் வெளியேறாமல் வலது கால் பெருவிரலில் சென்று படிகிறது. பின்னர் அது பளிங்கு கற்களாக மாற்றம் அடைகிறது. ஊசி போன்ற அந்தப் பளிங்குக் கற்கள் குத்தும்போது நோ வீக்கம் ஏற்படுகிறது. அறுபதுக்கும் மேலான வாதநோய் வகைகளில் இதுவும் ஒன்று.

'யூறிக் அமிலம் மிதமாக இருப்பதைக் கட்டுப்படுத்த Allo purinol என்ற குளிசையைப் போட்டால் சரியாகிவிடும். எனக் கும் இந்த கீல் வாதம் 40 வயதில் வந்தது. மருத்துவர் தினம் ஒரு Allopurinol குளிசை சாப்பிடச் சொன்னார். அத்தோடு மாதம் ஒரு முறை விட்டமின் பி ஊசி மருத்துவமனைக்கு வந்து போடுமாறு சொன்னார். வாதம் இப்போது கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. சிக்கல் இல்லை' என்று எனது நண்பர் ஒருவர் சொன்னார்.

சரி, நோய்க்கு மருந்து இருக்கிறது. நோய்க்கு மருந்து இருக்கும்வரை நோய் வந்தால் கவலைப்படத் தேவையில்லை. மருந்து இல்லாவிட்டால்தான் கவலைப்பட வேண்டும். இவ்வாறு சிந்தித்து மனதை ஆற்றிக் கொண்டேன்.

இந்தக் காலத்தில் தீர்க்க முடியாது எனக் கைவிடப்பட்ட பல வியாதிகளுக்கு பெரிய பெரிய நிறுவனங்கள் புதிய மருந்துகளைக் கண்டுபிடித்து சந்தைப் படுத்துகின்றன. அதே சமயம் புதுப்புது வியாதிகளும் பெருகிக்கொண்டே இருக்கின்றன.

வெளியில் போனால் நான் காலை சற்று இழுத்து இழுத்து நடப்பதைப் பார்த்து 'காலில் என்ன வருத்தம்' என்று கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். வருத்தத்தைச் சொன்னவுடன் 'அது எனக்கும் இருக்கிறது' என்றோ 'எனது அண்ணன், மச்சான் அல்லது மாமாவுக்கு இருக்கிறது' என்றோ பலர் சொல்ல ஆரம் பித்து விட்டார்கள்.

'பரவாயில்லை. நான் பெற்ற துன்பம் பெறுக இவ் வையகம்' என்று எனக்குள் சபித்துக் கொண்டேன்.

என் மீது அன்பு வைத்துள்ள ஒரு நண்பர் நாட்டில் இருந்து முடக்கொத்தான் இலையை மிகவும் சிரமப்பட்டு ஊரில் இருந்து வரவழைத்து அதை வீடு தேடி வந்து கொடுத்தார். அந்த இலையை நாள்தோறும் சுண்டல் செய்து சோற்றோடு சாப்பிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்று சொன்னார்.

அந்த இலை சரியான கைப்பு. இருந்தும் பல்லைக்கடித்துக் கொண்டு சில நாட்கள் சாப்பிட்டேன். ஆனால் பலன் இல்லை. பொதுவாக கைவைததியம் சரிப்பட்டு வருவதில்லை. மூலிகை வைத்தியம் நோய்களைக் குணப் படுத்துமேயானால் பலத்த பொருட்செலவில் கட்டப்படும் மருத்துவ மனைகளுக்கும், மருத்துவர்களுககும் தேவை இருக்காது. ஆனால் அது மூலிகைகளின் குறையல்ல. அதனைப் பயன்படுத்தும் முறையில் குறை இருக்கிறது என நினைக்கிறேன்.

நாட்கள் போகப்போக நடக்கும் போதும், படி ஏறும்போதும் இரண்டு முழங்காலும் சாடையாக நோகத் தொடங்கியது. மருத்துவரிடம் கேட்டபோது அது Cartilage arthritis என்று சொன்னார். அதாவது முழங்கால் சில்லு தேய ஆரம்பித்து விட்டதாம்.

கீல் வாதத்துக்கு என்ன வைத்தியம், எந்தவகையான உணவைச் சாட்பிடலாம், சாப்பிடக்கூடாது போன்ற தரவுகளை இணைய தளத்தில் போய்த்தேடினேன்.

உடல் நலத்துக்கும், உணவுக்கும் உறவுண்டு. ஆயுள் மற்றும் சித்த வைத்தியம்போல் அலோ பதி அதைப் பெரிதும் கண்டு கொள்வதில்லை. திருவள்ளுவர் மருந்து பற்றி தனி அதிகாரம் ஒன்றே படைத்திருக்கிறார்.

'உணவு மிகினும் குறையினும் நோய் செய்யும். உடலுக்கு மாறு செய்யாத உணவை மட்டும் உண்ண வேண்டும்' அளவு மீறி உண்டால் நோய் நீங்காது நிற்கும்.

முன் உண்ட உணவு செரித்ததை அறிந்து பிறகு உணவு உட்கொண்டால், உடம்பிற்கு மருநது என்ற ஒன்று வேண்டியதி ல்லை.

செரித்தது அறிந்து பிறகு உணவு உட்கொள்ளவேண்டும். மானிட உடம்பை நெடுங்காலம் பேணிக் காக்கும் வழி அதுவே யாகும்.

வயிற்றுப் பசியின் அளவுக்கு அதிகமாக உண்டால் நோய்களும் எல்லையில்லாது வளர்ந்து கொண்டே இருக்கும்.

மாறுபாடு இல்லாத உணவை, தன் உள்ளம் விரும்பிய அளவின்றிப் பிணி வாராத அளவு உண்டு வந்தால் பிணிகளால் துன்பம் உண்டாகாது.

தமிழ் மந்திரம் மூவாயிரம் பாடிய திருமூலர் 'எங்களது உடம்பு ஒரு கோயில் போன்றது. உள்ளம் கருவறை. வள்ளல் சிவன். வாய் கோபுரவாசல் சீவன் சிவலிங்கம். புலன் ஐந்தும் காளா மணி விளக்கு' என்கிறார்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணிவிளக்கே

(திருமந்திரம் 1823)

திருமூலர் வாழ்வின் முற்பகுதியில் உடம்பை இழிவுடைய தாக எண்ணினார். பின் உடம்பி னுள் உத்தமமான சிவனைக் கண்டார். அதனால் உடம்பையே கோயிலாகக்கொண்டார். உடம்பை இழுக்கென்று நினைத்தது தவறு என்று தெளிந்து அதனைப் போற்றி வளர்த்தார்.

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொ டானென்
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே

(திருமந்திரம் 725)

உண்மை ஞானம்பெற விழைபவர் உடம்பைக் குறிகொண்டு வளர்க்க வேண்டும். 'ஆறிலும் சாவு, நூறிலும் சாவு' என்று வெட்டி வேதாந்தம் கூறிக் கொண்டு வாழ்தல்கூடாது. உடம்பு அழிந்தால் அதன் நிலைக்களமாக விளங்கும் உயிரும் அழியும்.

ஞானம் என்பது சிந்தனைக் குரிய அறிவு. சிந்திக்கும் தன்மை மனதுக்குத்தான் உண்டு. அறிவு உலகப் பொருளை நல்லது இது அல்லது இது என்று பாகுபடுத்தி உணர்த்துகிறது.

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞானம் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே

பதிணென் சித்தர்களில் ஒருவரான கொங்கணச் சித்தர் திருமூலர் கருத்தை எதிரொலிக்கிறார்.

# ஈராக்கில் நடந்த தாக்குதலில் 3 அமெரிக்க படையினர் பலி!



ஈராக்கின் பல்வேறு இடங்களில் அமெரிக்கப் படையி னர்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் மூன்று அமெ ரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் சமராப் பகுதியில் வீதியோரமாக இடம் பெற்ற குண்டுவெடிப்பில் இரு படையினர் கொல்லப்பட்டது டன் மூவர் படுகாயமடைந்ததாக இராணுவம் தெரிவித்தது.

இரண்டாவது சம்பவம், எண்ணைத் தாங்கியில் சென்ற அமெரிக்கப் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஒரு படைவீரர் கொல்லப்பட்டதுடன் மற்றொருவர் படுகாயமடைந்தார்.

இதேவேளை கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ள அபுகிராப் சிறைச்சாலைமீது கிளர்ச்சியாளர்கள் நேற்றுமுன் தினம் நடத்திய மோட்டார்த் தாக்குதலில் கைதி ஒருவர் படுகாயமடைந்தார்.

ஈராக்கில் பாரதூரமான வன்செயல்களில் ஈடுபடாதவர்களுக்கு ஈராக்கின் இடைக்கால அரசு பொதுமன்னிப்பு வழங்குமென ஜனாதிபதி காஷி - அல் யாவீர் தெரிவித்தார்.

படுகொலை, பாலியல் வல்லுறவு மற்றும் கடத்தல் தொடர்பானவற்றில் ஈடுபட்டவர்களைத் தவிர மற்றவர்களுக்கே இந்தப் பொதுமன்னிப்பெனவும், இதற்கான அறிவிப்பு அடுத்த சில நாட்களில் வெளிவருமெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இஸ்லாமியப் போராளிகளால் கடத்தப்பட்ட பிலிப்பைன்ஸ் நாட்டவர் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை எனவும், அவரை விடுதலை செய்ய வேண்டுமெனில் பிலிப்பைன்ஸ் அரசு ஈராக்கிலிருந்து தனது படைகளை இந்தமாதம் 20 ஆம் திகதிக்குள் விலககவேண்டுமெனவும், இதற்கான கால எல்லை இன்று வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் போராளிகள் தெரிவித்தனர்.

# இஸ்ரேல் இராணுவ தாக்குதலில் பலஸ்தீன முதியவர் உயிரிழப்பு!

(டெல்அவிவ்)

காஸாப் பகுதியில் இஸ்ரேல் படையினர் நடத்திய தாக்குதலில் ஊனமுற்ற வயோதிபர் ஒருவர் கொல்லப்பட்டதாக பலஸ்தீனத்திலுள்ள வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

மொகமட் கலாஸ் (வயது 70) என்பவரே இந்தத் தாக்குலில் கொல்லப்பட்டவராவார்.

காஸாவின் தென்பகுதியிலுள்ள கான்யுனிஸ் நகரத்திலுள்ள வீடுகளை இஸ்ரேல் இராணுவத்தினர் புல்டோசர்கள் மூலம் அழிக்கும்வேளையில் அதற்குள் அகப்பட்டே இந்த முதியவர் உயிரிழந்தார்.

உலக நோக்கு

இந்த முதியவரின் மகள் மோனா பி.பி.ஸிக்குத் தெரிவிக்கையில் - எனது தந்தையார் இஸ்ரேல் இராணுவத்தினர் வீடுகளை தகர்க்கும்வேளையில் வீட்டினுள் இருந்தார். அவரை நான் வீட்டிற்கு வெளியே அழைத்து வருவதாக இஸ்ரேல் படையினருக்கு கூறியபோதும் அவர்கள் எனது கருததை செவிமடுக்கவில்லைஎனத் தெரிவித்தார்.

தமக்கு எவ்வித முன்னறிவிப்போ அல்லது எச்சரிக்கையோ தரப்படாமலே தமது குடியிருப்புக்களை இஸரேல் இராணுவத்தின் பாரிய புல்டோசர்கள் அழித்தாகக் குடியிருப்பு மக்கள் தெரிவித்தனர்.

இந்தக்குடியிருப்பில் மறைந்திருந்து இஸ்லாமியப் போராளிகள் இஸரேல் படையினர் மீது தாக்குதலை நடத்தியதாகவும் அதனாலேயே இவை அழிக்கப்பட்டதாகவும் இஸ்ரேல் இரணுவம் தெரிவித்தது.

# பிரதமர் ஷரோன் அரசுடன் இணைய தொழிற்கட்சித் தலைவர் இணக்கம்



காஸாப்பகுதியிலிருந்து இஸ்ரேல், படையினரை விலக்குவது தொடர்பாக பிரதமர் ஏரியல் ஷரோனுடன் இணைந்து செயற்பட அந்த நாட்டின் எதிர்க்கட்சியான தொழிற்கட்சித் தலைவர் சைமன் பெரஸ் இணக்கம் தெரிவித்தார்.

நேற்றுக்காலை நடைபெற்ற ஒரு மணிநேர கூட்டத்திற்குப் பின்னர் இன்றும் இருதலைவர்களும் சந்தித்துப் பிரதமர் ஷரோன் தலைமையிலான அரசாங்கத்துடன் தொழிற்கட்சி இணைவது தொடர்பாகக் கலந்துரையாட இருப்பதாக இருதலைவர்களும் தெரிவித்தனர்.

பிரதமர் ஷரோனின் அரசாங்கத்தில் கூட்டணிக்கட்சியாக இருந்த வலதுசாரிகள், பலஸ்தீனத்திலிருந்து இஸ்ரேல் படைகளை வாபஸ் பெறுவதில் கோபமடைந்து தமது ஆதரவை கடந்த மாதம் விலக்கிக் கொண்டனர். இதனால் ஷரோனின் அரசாங்கம் தனது பெரும்பான்மையை இழந்தது.

பலஸ்தீனப் பகுதிகளிலிருந்து இஸ்ரேல் படைகளை விலக்குமாறு தொழிற்கட்சி ஷரோனுக்கு அழுத்தம் கொடுக்குமென செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

பின்வரும் மூன்று கோரிக்கைகள் நிறைவேற்றப்படுமாக இருந்தால் இருகட்சிகளுக்கும் இடையிலான சமரசம் சாத்தியப்படுமென தெரிவிக்கப்படுகிறது. அவையாவன-

பலஸ்தீனத்திலிருந்து இஸ்ரேலியப் படைகள் விலகுவதை ஷரோன் தலைமையிலான அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும், வலதுசாரிகள் அரசாங்கததிலிருந்து விலகவேண்டும். பிரதமர் ஷரோன் மீது சட்டமா அதிபர் சுமத்திய இரண்டு ஊழல்கள் தொடர்பாக அவர் மீது எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கக் கூடாது என்பனவே அவையாகும்.

## பாதுகாப்பு அமைச்சராக இருந்தபோது

# அமெரிக்காவிற்குச் சென்ற என்னை நிர்வாணமாகச் சோதனையிட்டனர்!

## ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவிப்பு

(புதுடெல்கி)

'நான் பாதுகாப்பு அமைச்சராக இருந்தபோது அமெரிக்க குடியுரிமை அதிகாரிகள் என்னை நிர்வாணப் படுத்திச் சோதனை நடத்தியது உண்மைதான்' என்று ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கூறினார்.

அமெரிக்க வெளியுறவுத் துணை அமைச்சராக இருந்தவர் டால்பாட். இவர் சமீபத்தில் ஒரு புத்தகம் எழுதியுள்ளார். அதில் நான் அரசுமுறைப் பயணமாக இந்தியா சென்றேன். அப்போது பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜோர்ஜ் பெர்னாண்டஸ் என்னைச் சந்தித்தார். அமைச்சர் என றும் பாராமல் அமெரிக்காவின் டல்லாஸ் விமான நிலையத்தில் இரு முறை என்னை நிர்வாணப்படுத்திச் சோதனையிட்டனர்.

இதனால் நான் இனி உங்கள் நாட்டுக்கு வரமாட்டேன் என்று கோபமாகக் கூறினார், என்று எழுதப்பட்டது. பீகாரில் உள்ள தனது தொகுதியான முசாபர்பூருக்கு பெர்னாண்டஸ் நேற்றுமுன்திம் வந்தார். அங்கு நிருபர்களிடம் அவர் கூறுகையில் -

பாதுகாப்பு அமைச்சராக இருந்தபோது ஒருமுறை அரசுமுறைப் பயணமாக அமெரிக்கா சென்றேன். இன்னொருமுறை அமெரிக்கா வழியாக பிரேசில் சென்றேன். இருமுறையும் டல்லாஸ் விமானநிலையத்தில் என்னை நிர்வாணமாக்கிச் சோதனை நடத்தினர். அந்த வேதனையான அனுபவங்களை என்னால் மறக்க முடியாது. இனி நான் அமெரிக்காவுக்குச் செல்லவேமாட்டேன். இதுபற்றி அப்போது பிரதமராக இருந்த வாஜ்பாயிடம் கூறினேன் என்றார்.

இதுபற்றி எதிர்க்கட்சித் தலைவர் அத்வானி கூறுகையில் -



ஜோர்ஜ் பெர்னாண்டஎற்கு நடந்தது போல அமெரிக்காவில் என்னை யாரும் சோதனையிடவில்லை. பாதுகாப்புக் கருதி சப்பாத்துக்களை மட்டும் கழற்றி சோதனை நடத்துவார்கள். இதனை நிாவாணச் சோதனை என்று கூறமுடியாது. இதுபற்றி நான் பெர்னாண்டஸிடம் பேசுவேன் என்றார்.

## அமெரிக்காவின் முயற்சியாலேயே—

# தூக்குத் தண்டனையிலிருந்து நவாப் ஷெரீப் தப்பினாராம்!

## அமெரிக்க முன்னாள் வெளியுறவுச் செயலர் தகவல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் சில வருடங்களுக்கு முன்பு நடந்த தேர்தலில் வெற்றிபெற்ற நவாப் ஷெரீப் பிரதமரானார். அப்போது இராணுவத் தளபதியாக இருந்த முஷாரப் திடீர் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றினார்.

நவாப் ஷெரீப் சிறையில் அடைகக்கப்பட்டார். அவர் மீது ஊழல் குற்றச்சாட்டு, கொலைக் குற்றமும் சுமத்தப்பட்டது. இராணுவ நீதிமன்றில் விசாரணை நடந்தது. முன்பு ஷியா இராணுவப் புரட்சி நடத்தியபோது அப்போதைய பிரதமர் பூட்டோ தூக்கிலிடப்பட்டார். அதேபோல் நவாப் ஷெரீப்பும் தூக்கிலிடப்படுவார் என்று உலக நாடுகள் அஞ்சின.

இந்த நிலையில் இந்த விடயத்தில் அமெரிக்காவும், சவுதி அரேபியாவும் தலையிட்டதால் நவாப ஷெரீப் தூக்குத்தண்டனையில் இருந்து தப்பிவிட்டதாக அமெரிக்க முன்னாள் வெளியுறவுச் செயலர் ஸ்டிரோப் டால்பாட் தகவல் வெளியிட்டுள்ளார்.

அவர் எழுதியுள்ள 'எமர் ஜிங் இந்தியா' என்ற புத்தகத்தில் இதுபற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயத்தில் அமெரிக்கா நேரடியாகத் தலையிடாவிட்டாலும் சவுதி அரேபியா மூலம் மறைமுகமாகத் தலையிட்டது.

அதன்படி நவாப் ஷெரீப்புக்கு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டால் மலிவு விலையில் எண்ணெய் வழங்குவதை நிறுத்திவிடுவோம் என்று சவுதி அரேபியா எச்சரித்தது. இதனையடுத்து முஷாரப் பணிந்தார். நவாப ஷெரீப்புக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை விலக்கிக்கொண்டார். நவாப், அவரது சகோதரர், குடும்பத்தார் அனைவரும் சவுதி அரேபியாவுக்குக் குடிபெயர உத்தரவிட்டார். என்று புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பாகிஸ்தான் பிரதமருக்கு எதிராக இராணுவப் புரட்சி உருவாக நவாப் ஷெரீப்பே காரணம் என்று அப்போதைய இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந் சிங் தன்னிடம் கூறியதாகவும் ஸ்டிரோப் டால்பாட் கூறியுள்ளார்.

# திமிங்கிலங்களின் தாக்குதலில் அவுஸ்ரேலியாவில் இளைஞர் பலி

அவுஸ்ரேலியாவின் மேற்குப் பகுதியிலுள்ள மிகப்பிரபல்யம் வாய்ந்த கடலில் இரண்டு திமிங்கிலங்கள் மேற்கொண்ட தாக்குதலில இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

இளைஞர் சென்ற படகை ஒரு திமிங்கிலம் தாக்க, படகிலிருந்த அவர் கடலுக்குள் வீழ்ந்தாகவும் அவ்வேளை மற்றைய திமிங்கலம் இவரைத் துண்டு துண்டாகக் கடித்து உயிரிழக்கச் செய்ததாகவும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் பெயர் பிரட்லி ஸ்மித் என அவுஸ்ரேலியப் பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு திமிங்கலங்களில் ஒன்று



ஐந்து மீற்றர் நீளமானது மற்றையது மூன்று மீற்றர் நீளமானதெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு திமிங்கலங்களில் ஒன்று பெரிய காரின் அளவாக இருந்ததாகக் கடலிலிருந்து தப்பி வந்த மற்றொருவர் அவஸ்ரேலிய ஸ்கை தொலைக்காட்சிக்குத் தெரிவித்தார்.

# பொடா சட்டத்தை நீக்கும் முடிவை காங்கிரஸ் அரசு கைவிடவேண்டும்

## அத்வானி அரசுக்கு அறிவுறுத்தல்

பொடா சட்டத்தை நீக்குவது மிகப்பெரிய ஆபத்துக்கு வழிவகுக்கும். இச்சட்டத்தை நீக்கும் முடிவை மத்திய அரசு கைவிடவேண்டும். என்று முன்னாள் துணைப் பிரதமரும், லோக் சபா எதிர்கட்சித் தலைவருமான அத்வானி தெரிவித்தார்.

மல்லேஸ்வரம் மைதானத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் அவர் தெரிவித்ததாவது -

காந்தி, நேரு ஆகியோரிடம் இருந்த உயர்ந்த எண்ணம் இப்போதைய காங்கிரஸ் தலைவர்களிடம் இலலை. அந்த எண்ணம் இருந்திருந்தால் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியின்போது நியமிக்கப்பட்ட நான்கு ஆளுநர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கமாட்டார்கள்.

அரசியல் கட்சிகள் வேறாக இருக்கலாம், கட்சிகளின் கொள்கைகள் வேறுவேறாக இருக்கலாம். ஆனால், தகுதியானவர்களை மதிக்கும்குணம் எல்லோருக்கும் ஒன்றாக இருக்கவேண்டும்.

தற்போதைய காங்கிரஸ் கூட்டணி அரசில் பிரதமருக்கு மதிப்பில்லை எஸ்.பி.எம், சி.பி.எம். (மார்க்சிஸ்ட்) ரிமோட்கொண்ட்ரோல் மூலம் பிரதமர் இயக்கப்படுகின்றார்.

இதனால் எந்தப் பிரச்சினையையும் தற்போதைய பிரதமரால் சரியாகக் கையாளமுடியாது. பொடா சட்டத்தை முழுமையாக நீக்க மத்திய



அரசு முடிவு செய்துள்ளது.

மத்திய அரசின் இந்த நடவடிக்கை நாட்டில் மிகப்பெரிய ஆபத்துக்கு வழிவகுக்கும். தீவிரவாதிகளால் இராணுவத்தினர், பொலிஸார், பொதுமக்கள் ஆகியோர் பல்வேறு தொல்லைகளை அனுபவித்து வருகின்றனர். நாட்டின் பாதுகாப்பிற்கும், தீவிரவாதிகளின் தாக்குதலில் இருந்து மக்களைக்காப்பாற்றவும் பொடா இன்றியமையாதது.

இதனால் இந்தச் சட்டத்தை நீக்கக்கூடாது. அதற்கு முன்பு இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் பொதுமக்களுடன் மத்திய அரசு பேசவேணடும். பொடா தவறாகப் பயன்படுத்தப்படவில்லை. இந்தச்சட்டம் மிகமிக அவசியம். நாட்டின் பாதுகாப்பிற்கு இந்தச்சட்டம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஆதாரமில்லாத குற்றச்சாட்டை புலிகள் மீது சுமத்தக்கூடாது!

## வவுனியா அரசியற்துறைப் பொறுப்பாளர்

புலிகளுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் எந்தவிதமான குற்றச்சாட்டுகளையும் ஆதாரமில்லாமல் முன்வைக்க வேண்டாமென, படை அதிகாரிகளிடம் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் கேட்டுக்கொண்டார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா அலுவலகத்தில் நேற்றுப் பிற்பகல் மூன்று மணிக்கு படைத்தரப்பினருக்கும் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் சந்திப் பொன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் புலிகள் தரப்பில் - வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானவேல், மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் அலை ஆகியோரும் படையினர்தரப்பில் - மேஜர் ஜெனரல் சிசிர விஜேசூரிய, சிரேஷ்ட பெண் அத்தியட்சகர் மிஸ்தின் மற்றும் வவுனியா மாவட்ட அரச அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது - வவுனியாவில் அண்மைக்காலமாக இடம்பெறும் கொலைகள், விடுதலைப் புலிகளுக்குத் தெரியாமல் நடப்பதற்குச் சந்தர்ப்பம் இல்லையென படையதிகாரிகள் தெரிவித்தனர்.

அதற்குப் பதிலளித்தபோதே புலிகளுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் எந்தவிதமான குற்றச்சாட்டுகளையும் ஆதாரமில்லாமல் முன்வைக்க வேண்டாமென ஞானவேல் தெரிவித்தார்.

தொடர்ந்து இந்தச் சந்திப்பில் புலிகள் தரப்பில் தெரிவித்ததாவது-

எமது தேசிய நிகழ்வுகள் அல்லது அரசியல் கூட்டங்கள் நடைபெற்ற பின் மக்களை அச்சுறுத்தும் வகையில் புலனாய்வுத் துறையினர் விசாரணைகளை மேற்கொள்வது, அரசியல் பணிக்காக வந்த போராளிகளிடம் சில இடங்களில் அடையாள அட்டைகளைக் கேட்டு பதிவு செய்வது ஆகியவற்றை நிறுத்தும்படி படையினரிடம் வலியுறுத்தினர்.

அதனை கவனத்தில் எடுத்து நிச்சயமாக நடவடிக்கை எடுப்போமென படை உயரதிகாரிகள் கூறினர்.

பொதுவான இந்தச் சந்திப்பில் - மக்களின் மீள்குடியமர்வு தொடர்பாகவும் பேசப்பட்டது. கல்மடு, இரணை இலுப்பங்குளம், கோதண்டர் நொச்சிக்குளம், காக்கையன்குளம், கோவில் புளியங்குளம் ஆகிய இடங்களில் மக்களின் வீடுகளைப் பார்வையிடுவது, பயிர்ச்செய்கைக்கு அனுமதிப்பது, மீளக்குடியமர அனுமதிப்பது தொடர்பாக - இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவரும் எதிர்வரும் 23 ஆம் திகதி நேரடியாகச் சென்று குறிப்பிட்ட கிராமங்களைப் பார்த்து முடிவெடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (03)

## ஆறு மாகாண சபைகளிலும் 68 ஜே.வி.பி.உறுப்பினர்கள்!

### ஐவர் மட்டும் தோல்வியுற்றனர்

(கொழும்பு)

நடந்து முடிந்த ஆறு மாகாண சபைத் தேர்தல்களில் ஜே.வி.பிக்கு 68 இடங்கள் கிடைத்துள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் ஜே.வி.பியின் சார்பில் ஆறு மாகாண சபைகளுக்கும் 73 பேர் போட்டியிட்டனர். இவர்களில் 68 பேர் வெற்றிபெற்றுள்ளதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

இந்த ஆறு மாகாண சபைகளில் ஜே.வி.பிக்கு 22 ஆசனங்கள் மாத்திரம் கடந்த காலங்களில் இருந்தன. தென்மாகாண சபைக்கு 10 பேரும், சப்பிரகமுவ மாகாண சபைக்கு 10 பேரும், ஊவா மாகாண சபைக்கு 7 பேரும், வட மத்திய மாகாண சபைக்கு 8 பேரும் இந்த முறை ஜே.வி.பி சார்பில் தெரிவாகியுள்ளனர்.

மேல்மாகாணமான கொழும்பு மாவட்டத்தில் ஜே.வி.பி. சார்பில் நிறுத்தப்பட்டிருந்த எம்.மோகன் 20,909 விருப்பு வாக்குகள் பெற்று மாகாண சபைக்கு தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தே)

## கைதான பெண்ணின் இருப்பிடத்திலிருந்து வரைபடம், கடிதக்கோவை ஆகியன மீட்பு!

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் வெடித்த தற்கொலைக் குண்டுதாரிக்கு உதவிய பெண்ணின் இருப்பிடத்திலிருந்து வரைபடமும் கடிதக்கோவை ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

புறக்கோட்டையில் உள்ள பிரபலமான தொடர்மாடி ஒன்றைச் சுற்றி வளைத்த விசாரணை அதிகாரிகளால் இந்த ஆவணங்கள் கண்டெடுக்கப்பட்டன.

அங்கு கைப்பற்றப்பட்ட வரைபடத்தில் இந்தியத் தூதரகமும் காலி வீதியில் அமைந்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சுக்குச் செல்லும் பாதையும் அடையாளப்படுத்தப்பட்டிருந்ததாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

டக்ளஸ் தேவானந்தா கொலை முயற்சி பற்றி கைதுசெய்யப்பட்ட சததியா அறிந்திருந்ததாகவும், அவர் ஈ.பி.டி.பி அமைப்பில் இருந்தாலும் புலிகளுக்குத் தகவல்களை வழங்கி இருப்பது இதன்மூலம் தெரியவந்துள்ளது.

இவர் தனது கணவரிடமிருந்து விவாகரத்துப் பெற்றுக்கொண்டவர். அவர் விசாரணை அதிகாரிகளை தவறான பாதையில் இட்டுச்செல்லும் பொருட்டு தனது குடும்பத்தைப் புலிகள் கொன்றுவிடப்போவதாக எச்சரித்தமையாலேயே தான் கொலைத் திட்டத்துடன் தொடர்புபட்டிருந்ததாகத் தெரிவித்தார்.

அவர் தங்கியிருந்த லொட்ஜில் இருந்து வடபகுதிக்குச் தொலைபேசி அழைப்புக்களை எடுத்திருப்பதாகவும் தெரியவருகிறது எனவும் விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையில் இறந்து போன தற்கொலைக் குண்டுதாரியின் அடையாள அட்டையில் யாழ்ப்பாணம் வேம்படி வீதியில் வசித்தார் என்று குறிப்பிடப்பட்ட தகவல் போலியானது எனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அவரது பெயர் ஜெயராணி அல்ல எனவும், அவரது அடையாள அட்டை பொய்யானது எனவும் அந்த விசாரணை அதிகாரிகள் கூறினர்.

## ஆளும் கட்சி எம்.பிக்களுடன் ஜனாதிபதி இன்று சந்திப்பு!

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களை இன்று ஜனாதிபதி சந்திரிகா சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இன்று ஜனாதிபதி மாளிகையில் நடைபெறும் இந்தச் சந்திப்பில் சமாதான முயற்சியில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்தும், அதனை முன்னெடுத்துச் செல்வது பற்றிய எம்.பிக்களின் கருத்துக்களைக் கேட்டறிவதுடன் -

தற்போது வெற்றிபெற்ற மாகாண சபைகளுக்கு அமைச்சர்கள் மற்றும் முதலமைச்சர்களைத் தெரிவு செய்வது தொடர்பாகவும் ஆராயப்படுமென ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்சித் தலைவர்களை ஜனாதிபதி சந்திரிகா நாளை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். (01)

## 6 மாகாண சபைகளுக்கும் முதலமைச்சர்கள் நியமனம்!

(கொழும்பு)

நடந்து முடிந்த மாகாண சபைகளுக்கான தேர்தலின் பெறுபேறுகளுக்கமைய - 6 மாகாண சபைகளுக்கும் முதலமைச்சர்களை நியமிக்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தீர்மானித்துள்ளது.

இதன்படி மேல் மாகாண சபையின் முதலமைச்சராக றெஜினோல்ட் கூரே, சப்பிரகமுவ மாகாணசபையின் முதலமைச்சராக மகிபால ஹேரத், தென் மாகாண சபையின் முதலமைச்சராக சாந் விஜயலால் டி சில்வா, மத்திய மாகாணத்திற்கு சரத் எக்கநாயக்க மற்றும் வடமத்திய மாகாணத்திற்கு பேட்டி பிரேம்லால் திஸநாயக்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஊவா மாகாணத்திற்கான முதலமைச்சர் பதவிக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இதுவரை யாரென்பதனை அறிவிக்கவில்லை. (தே)

## பலத்த பாதுகாப்பின் மத்தியில்...

சென்று பார்வையிட்டனர்.

அத்துடன் ஏ-9 வீதியால் பளையிலிருந்து வந்த மக்களுடன் கலந்துரையாடினர்.

அமைச்சரின் இந்த விஜயத்தால் ஏ-9 வீதிப் போக்குவரத்து குறிப்பிட்ட நேரத்துக்குத் தடை செய்யப்பட்டிருந்தது.

இதையடுத்து நாகர்கோவில் படைத்தளத்துக்குச் சென்ற பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தலைமையிலான குழுவினர் அங்கிருந்து காங்கேசன்துறைக் கடற்படைத் தளத்திற்குச் சென்றனர்.

பல்வேறு இடங்களையும் பார்வையிட்டு படையினருடன் கலந்துரையாடிய இக்குழுவினர் பின்னர் கொழும்பு திரும்பினர்.

இதேவேளை, யாழ். குடாநாட்டுக்கு நேற்று முதல் தடவையாக விஜயம் செய்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, இங்குள்ள படையினருக்குப் புதிய அரசாங்கம் விசேட நலன்புரித் திட்டங்களை ஏற்படுத்தவுள்ளதாகத் தெரிவித்தார்.

முப்படைத் தளபதிகளுடன் பலாலிக்குச் சென்ற அமைச்சர் வடபிராந்தியக் கட்டளைத் தளபதியின் தலைமையில் நடந்த கூட்டமொன்றில் இராணுவ அதிகாரிகள், சிப்பாய்கள் மத்தியில் உரையாற்றினார்.

பல வருடங்களாக வசதிகள் குறைந்த நிலையில் யாழ் குடாநாட்டில் கடமைபுரியும் இராணுவத்தினருக்கு ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதற்காக இராணுவத்தில் புதியவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

படையில் சேர்த்துக் கொள்ளப்படும் இராணுவத்தினர் யாழ். குடாநாட்டுக்கு அனுப்பிவைக்கப்படுவர்.

யாழ். குடாநாட்டுக்கும், தென் பகுதிக்குமிடையே படையினருக்குத் தேவையான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் இந்த விஜயம் குறித்து கருத்து வெளியிட்ட பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் -

பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக பதவியேற்ற பின்னர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயம் இது.

உயர்பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியமர்வை மேற்கொள்வது தொடர்பான விவகாரத்துக்கும் இந்த விஜயத்துக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் யாழ் விஜயத்தை முன்னிட்டு குடாநாடு முழுவதிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. வீதியில் இராணுவ ரோந்து இடம் பெற்றதுடன், வீதிக் கண்காணிப்பு நடவடிக்கையிலும் பெருமளவு படையினர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். (01)

## கருணா....

செய்யப்பட்டவராவார்.

இவர் தன்னிடமிருந்த கைக்குண்டை ஆலயத்தின் மூலஸ்தானத்திற்குள் மறைத்து வைத்திருந் தாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

## புலிகளுடன்....

தலை தோற்றுவிக்கக் கூடியது.

மேலும் இலங்கையர்கள் அனைவரதும் நிரந்தர சமாதானத்துக்கு இந்தச் சம்பவங்கள் தடையாக அமைந்துவிடலாம் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளுக்கு....

புலிகளின் இரட்டைவேடத்தைக் கண்டிப்போம்.

புலிகள் குண்டுவெடிக்கை யில், என்.ஜி.ஓ. சமாதானப் புலி கள் ஆழ்ந்த நித்திரையில்.

நாட்டை அச்சுறுத்தி சர்வாதிகாரத்துக்கு வழிசமைத்திட, இடைக்கால நிர்வாகத்தை வென்றெடுக்கும் புலிகளை விரட்டியடிப்போம் ஆகிய வாசகங்கள் காணப்பட்டன.

மாகாணசபைத் தேர்தல் முடிந்த கையோடு - புலிகள் இயக்கம் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள், புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபை ஆகியவற்றுக்கெதிராக கொழும்பு மாநகரம் உட்பட கொழும்பின் பல பாகங்களிலும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் ஜே.வி.பி. இந்த சுவரொட்டி பிரசாரத்தை ஆரம்பித்துள்ளது. (தே)

London English College
No. 105 Arasady Road, Jaffna
T.P : 222-5889 Mobile: 94777-2522180, 94776 - 303539
Listen Understand Speak
முற்றிலும் மாறுபட்ட கற்கை நெறி முறை
உயர் நிலைப் பதவியில் உள்ளவர்களுக்கான தொடர்பாடல் ஆங்கில வகுப்புக்கள்
Listening
Language Stracture
Reading comprehension
Speech & Computer
இலவச அடிப்படை கணினி கற்கை நெறியும் இதற்குள் வழங்கப்படும்
Educational excursion
IELTS/ TOEFL Classess
சிறுவர்களுக்கான வகுப்புக்கள்
Disscussion & Writing
மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்
practice Makes perfect
BCNS
BCNS No . 229.Mitchan Road Tooting
Sw 1790, London UK
(சி-2757)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.